வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු








Email : news@eelanadu.lk | மலர் : 01 | 02.11.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 332 | பக்கங்கள் : 16


# கோட்டாபயவை கைது செய்யுமாறு பிரிட்டனில் தமிழர்கள் போராட்டம்!




## பொலிஸ் பாதுகாப்புடன் வெளியேறினார்

கிளாஸ்கோ, நவம்பர் 02

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவில் திரண்ட பல நூறு புலம்பெயர் தமிழர்கள் பெரியளவிலான போராட்டங்களை பல இடங்களிலும் நேற்று நடத்தினர்.**

காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சி. ஒ. பி. 26 மாநாடு பிரிட்டனின் - ஸ்கொட்லாந்திலுள்ள கிளாஸ்கோ நகரில் நடைபெறுகின்றது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிளாஸ்கோ நகருக்கு சென்றுள்ளார்.

அங்கு, டன்பிளேன் பகுதியிலுள்ள டபிள் ட்ரீ ஹில்டன் ஹோட்டலில் அவர் தங்கியிருந்த நிலையில், நேற்றுக் காலை ஹோட்டலின் முன்பாகக்கூடிய புலம்பெயர் தமிழர்கள் அவருக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டனர். அவர்கள் கைகளில் புலிக் கொடிகளையும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது, "இலங்கை அரசு; பயங்கரவாத அரசு", "கோட்டாபயவே திரும்பி போ", "இனப்படுகொலையாளியை கைதுசெய்க" என்ற கோஷங்களை

15

## பூஸ்டர் தடுப்பூசி ஏற்றல் வடக்கில் நாளை ஆரம்பம்!

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், நவ. 02

வடக்கு மாகாணத்தில் கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் எனப்படும் மூன்றாவது டோஸ் செலுத்தும் நடவடிக்கை நாளை புதன்கிழமை தொடக்கம் முன்னெடுக்கப்படும் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் தரப்பினர், படைத்தரப்பினர் உள்ளிட்ட முன்கள செயல்பாட்டாளர்களுக்கு முதல் கட்டமாக தடுப்பூசி செலுத்தப்படும். இதன் தொடர்ச்சியாக நோயாளர்கள் மற்றும் வயோதிபர்களுக்கும் பூஸ்டர் டோஸ் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் டோஸாக பைசர் தடுப்பூசி செலுத்தப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## யாழில் இன்று கூடுகின்றன தமிழ் கட்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 02

13ஆம் திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக, அது ஆரம்ப கட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட நிலையிலேயே, நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கத்தை ஒருமித்த நிலைப்பாட்டில் கோருவதற்கான கலந்துரையாடல் இன்று காலை பத்து மணி தொடக்கம் யாழ்ப்பாணம், திருநெல்வேலி திண்ணை ஹோட்டலில் நடைபெற

15

## தொற்றும் மரணமும் நாட்டில் அதிகரிப்பு!

### மருத்துவர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 02

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் தொகை மற்றும் கொரோனா மரணங்களில் அண்மைக்காலமாக சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன என்று இலங்கை மருத்துவர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் பின்னரான பொதுமக்களின் நடத்தையின் விளைவுகளை இன்னும் 2 முதல்

15

## நீதியமைச்சர் பதவியிலிருந்து அலி சப்ரி விலகத் தீர்மானம்!

கொழும்பு, நவ. 01

அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள ஒரேயொரு முஸ்லிம் அமைச்சரும் நீதியமைச்சருமான அலி சப்ரி பதவி விலகத் தீர்மானித்துள்ளார். ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவராக கலகொடை அத்தே ஞானசார

15

## இந்திய தூதுவர் பாக்லேயுடன் வடக்கு மீனவர்கள் சந்திப்பு!

கொழும்பு, நவ. 02

வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து இந்திய தூதுவர் கோபால் பாக்லேயை வடக்கு மீனவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனின் ஏற்பாட்டிலும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தனின் ஒழுங்கமைப்பிலும் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஏற்பாட்டாளர்களுடன் வடக்கு

15

## கொரோனாவுக்கு 17 பேர் மரணம்!

கொழும்பு, நவ. 02

கொரோனா தொற்று காரணமாக நாட்டில் மேலும் 17 பேர் உயிரிழந்தனர் என்று நேற்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்தார்.

இவர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு இறந்தவர்களில் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்கள் 6 பேரும்,

15

## ஐ. எஸ். அமைப்புடன் தொடர்பு; 702 பேர் கைதாகி விசாரணை!

கொழும்பு, நவ. 02

இந்தியாவை மையப்படுத்திய ஐ. எஸ். அமைப்புடன் தொடர்புடைய இலங்கையர்கள் 702 பேர் கைதாகி, அவர்கள் தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பயங்கரவாத விசாரணை பிரிவினர் நீதிமன்றத்துக்கு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு

15




# பட்ஜெட்டுக்கு பின்னர் அமைச்சரவை மாற்றம்

## புதிய முகங்களுக்கு இடம்

கொழும்பு,நவ. 02

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் உடனடியாக அமைச்சரவையை மறுசீரமைப்புச் செய்வது குறித்து அரசின் உயர் மட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாக அரச வட்டார தகவல்கள் தெரிவித்தன.

அதன்படி, புதிய முகங்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கு உத்தேசித்துள்ளதுடன், மேலும் சிலருக்கு இராஜாங்க அமைச்சு பதவிகளையும் வழங்குவதற்கு கலந்தாலோசிக்கப்படுவதாகவும் அறிய முடிந்தது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் 2021 நவம்பர் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதம் ஆரம்பிக்கப்பட்டு 2021 நவம்பர் 22 ஆம் திகதி வரை விவாதம் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, வரவு-செலவுத் திட்டம் தொடர்பான செயற்குழு விவாதம் 2021 நவம்பர் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளதுடன், வரவு செலவுத் திட்டம் மூன்றாவது வாசிப்பின் வாக்கெடுப்பை 2021 டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வரவு-செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தற்போதுள்ள அமைச்சரவையில் சில மாற்றங்கள் முன்னெடுப்பது குறித்து அரசின் உயர் மட்டத்தில் கலந்தாலோசிக்கப்படுவதாக அறிய முடிந்தது.(அ)

## ஆசிரியர் இடமாற்ற பிரச்னைகள் குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கம்

கொழும்பு, நவ. 02

தேசிய பாடசாலைகளின் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் காணப்படும் பிரச்னைகள் குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா பரவல் காரணமாக கல்வி அமைச்சின் இடமாற்ற பிரிவுக்கு ஆசிரியர்களை அழைக்கும் செயல்பாட்டை இடைநிறுத்த தீர்மானித்துள் ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 011 27 84 434, 011 27 85 141 அல்லது 011 27 85 150 என்ற இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என கூறப்பட்டுள்ளது. (அ)

## வடக்கில் 2 நாள்கள் மழை நீடிக்கும்

யாழ்ப்பாணம், நவ. 02

வடக்கில் மேலும் 2 நாட்களுக்கு மழை நீடிக்கும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் என்.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

தாழமுக்கமானது தற்போது சிலாபத்துக்கு மேற்காக நிலை கொண்டிருப்பதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பாகங்களுக்கும் தொடர்ச்சியாக இரண்டு நாள்களுக்கு மழை கிடைப்பதற்கான வாய்ப்பு காணப்படுவதாக அவர் கூறினார். (அ-03)

## மூன்று அமைச்சர்கள் குறித்து நாமல் ராஜபக்ஷவும் அதிருப்தி

கொழும்பு, நவ. 02

சமகால அரசாங்கத்தின் செயல்பாடு குறித்து விமர்சித்து வரும் மூன்று அமைச்சரவை அமைச்சர்கள் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அவர்கள் அரசில் இருந்து கொண்டு அதற்கு எதிராக கருத்து வெளியிடுவதாகவும் நாமல் குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் யுகதனவி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தம் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அது முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அமைச்சர்களின் கருத்துக்களை முன்வைப்பதற்கான சந்தரப்பம் வழங்கப்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் கருத்துக்களை முன்வைக்காமல் வெளியில் சென்று பேசுவது தவறு-என்றார்.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்கும் செயல்பாட்டுக்கு எதிராக மூன்று அமைச்சர்கள் வெளியிட்ட கருத்து தொடர்பில் கேட்கப்பட்ட போதே நாமல் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரே யுகதனவி மின் உற்பத்தி செயல்பாட்டுக்கு எதிராக கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மண் சரிவால் மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, நவ. 02

ஹாலி எல தெமோதரை பகுதியில் ரயில் நிலையங்களுக்கு இடையில் மண்சரிவு மற்றும் கற்பாறை சரிந்து வீழ்ந்ததில் மலைநாட்டு ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் பதுளையிலிருந்து நானுஓயா நோக்கிப் பயணித்த ரயில் ஒன்று தடைப்பட்டுள்ளது.

மண் மற்றும் கல்லை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெமோதரை ரயில் நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியில் தமிழ் பிரதிநிதிகளும் அவசியம்தான்

## ஏற்றுக்கொள்கிறாராம் ஞானசார தேரர்

கொழும்பு, நவ. 02

ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணிக்கு தமிழ் பிரதிநிதி ஒருவர் அவசியம் என்பதை தாம் ஏற்றுக் கொள்வதாக அதன் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயலணி தொடர்பில் தொலைகாணொளி ஊடாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினர் தங்களுக்கான வாக்குகள் குறித்தே கவனம் செலுத்துகின்றனர். வடக்கு-கிழக்கில் மத ரீதியான பல பிரச்னைகள் காணப்படுகின்றன. எனினும், தெற்குடனான மத பிரச்னை குறித்து கருத்துரைக்கின்றனர்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்னைகளை நாம் நன்கு அறிந்துள்ளோம்.

இந்நிலையில் தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் ஆரம்பத்திலேயே அதில் உள்ள குறைபாடுகளைக் கூறி பிரச்னைகளை ஏற்படுத்தாமல் முதலில் அதன் திட்டங்களை வகுப்பது முக்கியமானதாகும்.

அதேநேரம் நாட்டில் சிறுபான்மை என்று ஒரு இனம் இல்லை.

நாட்டில் இலங்கையர்கள் என்ற இனம் மாத்திரமே உண்டு. இன ரீதியாக யாரையும் பிரித்துப் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை-என்றார். (அ)

## வடமாகாண மரநடுகை மாதம் 02 கார்த்திகை 2021

**“நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.”**

**- வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலபதிபர்)**

### கல்வி tv CHANNEL-1 — 02.11.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி tv CHANNEL - 2 — 02.11.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
02.11.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# ஜனாதிபதியுடன் பேசுதல்?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவாரென்று, அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்திருக்கின்றார். இராஜதந்திரிகளுடனான சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்திருக்கின்றார். பல மாதங்களாக சம்பந்தன் காத்துக் கொண்டிருக்கின்றார். சம்பந்தன் கடிதங்கள் அனுப்பியும் ஜனாதிபதியிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை.

இவ்வாறானதொரு சூழலில்தான் தமிழ் புலம்பெயர் அமைப்புக்களுடன் பேசவுள்ளாரென ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஐ. நா. செயலாளர் நாயகத்துடனான சந்திப்பின்போது கூறியதை பின்னர் இந்திய வெளிவிவகார செயலாளருடனான சந்திப்பின்போதும் தெரிவித்திருந்தார். ஆனால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்புடன் பேசுவதை அவர் நிராகரித்து வருகின்றார். இவ்வாறானதொரு நிலையில்தான், ஸ்கொட்லாந்துக்கு சென்றிருக்கும் ஜனாதிபதிக்கு எதிராக புலம்பெயர் அமைப்புக்கள் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றன.

சம்பந்தன் அரசியல் யாப்பு தொடர்பில் அவ்வப்போது பேசி வருகின்றார். கடந்த ஆட்சிக் காலத்தில் பேசியது போன்று. ஆனால், கடந்த ஆட்சிக்கும் இந்த ஆட்சிக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடு உண்டு. கடந்த அரசாங்கம் ஏதோவொரு வகையில் கூட்டமைப்பிற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாட்டை கொண்டிருந்தது. கூட்டமைப்பும் அரசாங்கத்துடன் பல்வேறு வழிகளிலும் இணங்கிச் செயல்பட்டது. ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டுவர முடியுமென்று சம்பந்தன்- சுமந்திரன் - மாவை முக்கூட்டு நம்பியிருந்தது. நம்பிக்கையில்லாத போதும் கூட்டமைப்பின் பங்காளிகள் என்னும் வகையில் ரெலோவும் புளொட்டும் அமைதி காத்திருந்தன. ஆனாலும், புளொட் தலைவர் சித்தார்த்தன் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் அவநம்பிக்கையாகவே பேசிவந்தார்.

இறுதியில் சம்பந்தன் - சுமந்திரன் - மாவை முக்கூட்டு மோசமான தோல்வியை சந்தித்தது. இந்தத் தோல்வி அனுபவங்களிலிருந்துதான் தற்போது ரெலோவும் புளொட்டும் இந்தியா வலியுறுத்தி வரும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்திவருகின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த விடயத்தில் கணிசமான வெற்றியைப் பெற்றிருக்க முடியும். ஆனாலும் சாத்தியமற்ற புதிய அரசியல் யாப்பு முயற்சியில் காலம் விரயமானது. அதேவேளை கடந்த ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் தலையீடு தேவையற்ற ஒன்று என்றே சம்பந்தன் கருதியிருந்தார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது ஒருமுறைகூட, புதுடில்லிக்கு சென்றிருக்கவில்லை. இது அவரின் அணுகுமுறையை தெளிவாக படம்பிடித்தது.

ராஜபக்ஷவின் அரசாங்கமும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசிவருகின்றது. இதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தங்கள் பணிகளை நிறைவு செய்திருப்பதாகவும், விரைவில் உத்தேச வரைவை முன்வைக்கும் என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சம்பந்தன் ஜனாதிபதியுடன் பேசுவதற்காக காத்திருக்கின்றார். ஆனால், அவரோ இதுவரை சம்பந்தனை ஒரு விடயமாகவே எடுக்கவில்லை. இந்த நிலையில்தான் நாடு திரும்பியதும் ஜனாதிபதி சந்திப்பாரென்று பீரிஸ் கூறுகின்றார்.

ஜனாதிபதி சந்திப்பாரா அல்லது இலலையா என்பதை அவர் மட்டும்தான் தீர்மானிப்பார். பீரிஸ் போன்றவர்களின் கருத்துக்களை அவர் எந்தளவிற்கு செவிமடுப்பார் என்பதற்கும் உத்தரவாதமில்லை. அவர் நல்ல மனநிலையில் இருந்தால் ஒருவேளை சந்திக்கக்கூடும். ஆனால், ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிவிட்டு காத்திருப்பதானது தமிழர் தரப்பு எந்தளவு பலவீனமாக இருக்கின்றது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இதற்கிடையில் தமிழர்களை நோக்கி முழு உலகும் திரண்டிருப்பதான போலி பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. புவிசார் அரசியல் அதிக வாய்ப்புக்களை தரப் போவதாக கூறப்படுகின்றது. இந்தளவு முக்கியமுள்ள தமிழர் தரப்பை சந்திப்பதில் ஏன் ஜனாதிபதி கரிசனை காண்பிக்கவில்லை?

# வெறுப்புணர்வை அதிகரிக்கிறதா பேஸ்புக்

*முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பேஸ்புக்கின் தீய விளைவுகள் தொடர்பாகக் கேள்விகளும் விவாதங்களும் விசாரணைகளும் தீவிரமடைந்துள்ளன. புகார்களுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் நேரடியாகப் பதில் சொல்ல முடியாமல் உலகின் செல்வாக்கு மிக்க சமூக வலைப்பின்னல் சேவை நிறுவனம் தடுமாறிக்கொண்டிருக்கிறது.*

*பேஸ்புக்குக்கு எதிரான தற்போதைய விமர்சன சூறாவளியின் மையமாக இருப்பவர் பிரான்சிஸ் ஹேகன். பேஸ்புக் நிறுவனத்தில் பணியாற்றிய முன்னாள் அதிகாரியான ஹேகன் அந்த நிறுவனத்திலிருந்து விலகி, தவறுகளை அம்பலப்படுத்துபவராக மாறி வெளியிட்டுவரும் தகவல்களே இணைய உலகில் அதிர்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.*

*சமூக நலனையும் பயனாளிகள் நலனையும் விட வர்த்தக இலாபத்தையே பேஸ்புக் முதன்மையாகக் கருதுகிறது என்பதே ஹேகனின் முக்கிய குற்றச்சாட்டு. இணைய உலகில் பேஸ்புக்கின் செல்வாக்கை மனதில்கொண்டு பார்க்கும்போது இந்தக் குற்றச்சாட்டின் தீவிரத்தை உணரலாம். இதற்கான ஆதாரங்களையும், தொடர்புடைய இன்ன பிற தகவல்களையும் அவர் பத்திரிகை மூலம் வெளியிட்டு, ஒட்டுமொத்த இணைய உலகையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார்.*

*2018ஆம் ஆண்டு வெடித்த கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா விவகாரத்தில் தகவல்களை விளம்பர நோக்கில் அறுவடை செய்வதில் பேஸ்புக் தீவிரமாக இருப்பதும், இதன் விளைவாகப் பயனாளிகளின் தனியுரிமை கேள்விக்குள்ளாவதும் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது. பேஸ்புக்கின் இலாப நோக்கிலான செயல்பாடுகள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி, ‘பேஸ்புக்கை விட்டு வெளியேறுவோம்’ எனும் இணைய எதிர்ப்பு இயக்கத்துக்கும் இந்த சர்ச்சைக்கு வித்திட்டது.*

*இந்த சர்ச்சைக்கு மத்தியில், 2016 அமெரிக்கத் தேர்தலில் பேஸ்புக் பயன்படுத்தப்பட்ட விதமும் விவாதப் பொருளானது. பேஸ்புக்கின் தகவல் அறுவடை உத்திகள் மூலம், குறிப்பிட்ட இலக்கு வாக்காளர்களைக் குறிவைத்துப் பிரசாரம் செய்ய பேஸ்புக் பயன்பட்டதாகவும், இந்தப் பிரசாரத்தில் பொய்ச் செய்திகள் முக்கிய பங்கு வகித்தன என்றும் குற்றம்சாட்டப்பட்டது.*

*மேலும், மியன்மார் உள்ளிட்ட நாடுகளில் வன்முறையையும் துவேஷத்தையும் தூண்டும் கருத்துகளையும் பொய்ச் செய்திகளையும் பகிர்ந்துகொள்ளும் வாகனமாக பேஸ்புக் விளங்குவது தெரியவந்தது. இது போன்ற குற்றச்சாட்டுகள் குவிந்த நிலையில், பேஸ்புக் போதிய பொறுப்புணர்வை காட்டுவதில்லை.இந்தப் பின்னணியில்தான் பேஸ்புக் மீதான புதிய குற்றச்சாட்டுகள் வெளியாகத் தொடங்கின. அமெரிக்காவின் ‘தி வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்’ நாளிதழில் இவை முதலில் வெளியாகத் தொடங்கின. பேஸ்புக்கின் துணைச் சேவையான இன்ஸ்ட்ராகிராம், இளம் பெண்களின் ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைவிக்கிறது என்பதை நன்கு அறிந்திருந்தும் பேஸ்புக் அது தொடர்பாக மாற்று நடவடிக்கைகள் எடுக்காமல், பாதிப்பு ஏற்படுத்தும் உத்திகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருகிறது என்பது இந்தக் குற்றச்சாட்டின் மையம்.*

*குழந்தைகளுக்கான இன்ஸ்ட்ராகிராம் சேவையை பேஸ்புக் அறிமுகம் செய்ய இருப்பதாக வெளியான தகவல், கடும் கண்டனத்துக்கு உள்ளான சூழலில், இந்தத் தகவல் வெளியானது. இதற்கு ஆதாரமாக பேஸ்புக் நிறுவனத்துக்குள் பயன்படுத்தப்பட்ட ஆய்வுக் குறிப்புகளையும், தகவல் பரிமாற்றங்கள் உள்ளிட்ட ஆவணங்களையும் அந்த நாளிதழ் ஆதாரமாக வெளியிட்டிருந்தது. பேஸ்புக்கின் நியூஸ் ஃபீடை இயக்கும் ஆல்கரிதம் பயனாளிகளிடமிருந்து கோபமான எதிர்வினையைத் தூண்டும் தகவல்களை முன்னிறுத்தும் வகையில் அமைந்திருப்பதாகவும், இதை பேஸ்புக் தெரிந்தே தொடர்ந்து செய்துவருவதுடன், பயனாளிகளை அதிக நேரம் பேஸ்புக்கில் தங்கியிருக்கச் செய்வதே இதன் நோக்கம் என்றும் இந்தச் செய்தியில் கூறப்பட்டது.*

*பேஸ்புக்கின் தாக்கத்தையும், அதன் வர்த்தக நோக்கிலான செயல்பாட்டையும் அம்பலப்படுத்திய இந்தத் தகவல்கள் பேஸ்புக் கோப்புகள் எனக் குறிப்பிடப்பட்டன. இந்நிலையில்தான், இந்தத் தகவல்களைத் துணிந்து வெளிப்படுத்திய நபர் யார் எனும் விவரம் வெளியானது. அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், பேஸ்புக்கின் முன்னாள் அதிகாரியான பிரான்சிஸ் ஹேகன், தன்னை விசிலூதியாக அறிமுகம்செய்துகொண்டு மேலும் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார். பேஸ்புக் நிறுவனத்தின் செயல்பாடுகளால் வெறுத்துப் போய், அதிலிருந்து விலகினாரென்றும் கூறினார். பேஸ்புக்கிலிருந்து வெளியேறும் முன், அதன் மோசமான செயல்பாடுகளை உணர்த்தும் ஆதாரங்களை அவர் கவனமாகத் திரட்டிக்கொண்டார். இப்படித் திரட்டிய ஆதாரங்களே பேஸ்புக் கோப்புகளாக இணைய உலகில் சூறாவளியை உண்டாக்கின.*

*இதைத் தொடர்ந்து, அமெரிக்க பாராளுமன்றத் துணைக் குழுவின் முன் அவர் ஆஜராகி, பேஸ்புக்கின் மோசமான செயல்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளித்தார். இதே போல பிரிட்டனில் நடைபெறும் விசாரணையிலும் சாட்சியம் அளித்திருக்கிறார். பேஸ்புக்கின் தீய விளைவுகளைத் துணிந்து அம்பலப்படுத்தியதற்காக அமெரிக்காவின் ‘நவீன நாயகி’ என்றும் ஹேகன் பாராட்டப்படுகிறார்.*


*இநநிலையில், பேஸ்புக் நிறுவனம் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பான கேள்விகளும் தீவிரமடைந்துள்ளன.*

*பேஸ்புக் மீதான விவாதமும் விசாரணையும் தீவிரமாகியுள்ள நிலையில், இது பேஸ்புக் என்ற தனி நிறுவனம் தொடர்பான பிரச்னை மட்டும் அல்ல, உண்மையில், இணைய யுகத்தில் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் ‘பிக் ரெக்’ எனக் குறிப்பிடப்படும் பேஸ்புக், கூகுள், அப்பிள் போன்ற பெரிய நிறுவனங்களை உள்ளடக்கிய பிரச்னை இது என்று இணைய வல்லுநர்கள் கூறுகின்றனர்.*

*பேஸ்புக் தனது வளர்ச்சியில் அடுத்த கட்டப் பாய்ச்சலுக்குத் தயாராகியுள்ளது. மாறிவரும் உலகில் வளர்ச்சியைத் தக்க வைப்பதற்கான எதிர்கால உத்திகளை வகுப்பதில் கவனம் செலுத்துகிறது. பேஸ்புக் போன்ற எல்லாம் வல்ல இணைய நிறுவனங்களுக்கு கடிவாளம் போடுவதற்கான செயல்களும் இதற்கு ஈடுகொடுக்க வேண்டும் என்பதே இணைய வல்லுநர்கள் செயல்பாட்டாளர்களின் கருத்தாக இருக்கிறது.*

*நன்றி : தி இந்து*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 02 செவ்வாய்க்கிழமை**
**பிலவ வருடம் - ஐப்பசி - 16**
**நல்ல நேரம் : 7.30 - 9.00**
**ராகு காலம் : 3.00 - 4.30**
**திதி : திரையோதசி**




**மேடம்**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். மன நிறைவு வரும். தொழில், பணியில் முன்னேற்றம் அதிகரிக்கும். கல்வி சிறக்கும். எடுத்த முயற்சி ஒன்று கைகூடும். சுபச்செய்தி வரும்

**இடபம்**
உங்களின் திட்டம் வெற்றி பெறும். நண்பர்களின் ஆதரவு கிட்டும். விவாதங்கள் நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக நல்ல முடிவிற்கு வரும். பணியில் உள்ள தடைகள் அனைத்தும் நீங்கும்.

**மிதுனம்**
உங்களை எதிர்த்தவர் மனம் மாறுவார். இனிமையான நாள். ஏற்ற இறக்கமான சூழ்நிலைகள் இன்றிலிருந்து மாறும். நினைத்து மகிழத்தக்க அனுபவம் ஒன்று கிடைக்கும்.

**கடகம்**
நண்பர் ஒருவருடன் இருந்த சண்டை முடிவுக்கு வரும். எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்படும். மகிழ்வான நாள். வீடு, இடம் வாங்கும் முயற்சியில் முன்னேற்றம் கூடும்.

**சிம்மம்**
நட்பு வட்டம் விரிவடைந்தாலும் அது பற்றி கவனமாயிருங்கள். தந்தைக்கு இருந்து வந்த நோய் அகலும். மாணவர்கள் மகிழ்வர். பணி பற்றிய முயற்சி ஒன்று நல்ல பலன் தரும்.

**கன்னி**
காலை நேரத்திலேயே பணம் வந்து மகிழ்ச்சி தரும். செல்வாக்கு மிக்க ஒருவருடன் திடீர் சந்திப்பு நிகழும். பணி, தொழிலில் நாட்டம் அதிகரிக்கும். நிம்மதியான நாள்.

**துலாம்**
அதிகாலையில் வரும் செய்தி ஒன்று ஆனந்தம் அளிக்கும். உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திட்ட ஒருவரைத் திட்டமிட்டு சந்திப்பீர்கள். தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள். மனநிறைவு வரும்.

**விருட்சிகம்**
கூடுதல் முயற்சியால் தடைகளை அகற்றுவீர்கள். கவலை தீரும். உறவினரால் மனதில் ஏற்பட்ட குழப்பம் ஒன்று நீங்கும். நின்றிருந்த பேச்சு வார்த்தை ஒன்று மீண்டும் தொடரக்கூடும்.

**தனுசு**
எதிர்ப்புகளைச் சமாளித்து வெல்வீர்கள். மனதில் அமைதி கூடும். உடன்பிறந்தோரால் ஏற்பட்ட இடையூறு ஒன்று அகலும். குழந்தைகளால் சிறு நன்மை உண்டு. உழைப்பு பலன் தரும்.

**மகரம்**
சொத்துகளை வாங்க, விற்க முயற்சி எடுக்கும் நாள். விரோதங்கள் விலகும். கடுமையாக உழைக்க வேண்டி வரும். சமீபத்தில் முயன்ற விஷயம் ஒன்று வெற்றியாக முடியும்.

**கும்பம்**
நண்பர் ஒருவர் நல்ல செய்தியை கொண்டு வந்து சேர்ப்பார். வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கவனம் தேவை. இன்றை நிகழ்வு ஒன்று திருப்தி தரும். குதூகலமான நாள்.

**மீனம்**
வருமானம் பற்றிய கவலை தீரும். புது நட்பு உருவாகும். திட்டமிட்ட விஷயம் ஒன்றில் திடீர் மாற்றம் செய்ய நேரலாம். பணியிடத்தில் அனுசரித்து செல்வீர்கள். திட்டமிட்ட பயணம் மாறும்.

# தமிழ்நாடு அரசால் வன்னியர்களுக்கு வழங்கப்பட்ட உள் ஒதுக்கீடு இரத்து!

## உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை தீர்ப்பு

மதுரை, நவ. 02

வன்னியர்களுக்கான 10.5 சதவீத உள் ஒதுக்கீட்டு அரசாணையை இரத்து செய்வதாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை நேற்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளது. “அரசுத் தரப்பு அளித்த விளக்கம் போதுமானதாக இல்லை” எனவும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாட்டில் கல்வி, வேலை வாய்ப்பில் வன்னியர்களுக்கு தனி இடஒதுக்கீடு கோரி பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் வன்னியர் சங்க அமைப்புகள் தொடர் போராட்டங்களை நடத்தி வந்தன. கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது அ.தி.மு.க அணியில் பா.ம.க இணைவதற்காக நடந்த பேச்சிலும், வன்னியர் இட ஒதுக்கீடு கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இதையடுத்து, தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு குறித்த அறிவிப்பை வெளியிட்டார் முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி.

இதன்பின்னர், தி.மு.க அரசு பொறுப்பேற்ற பிறகு வன்னியர் இடஒதுக்கீடு தொடர்பாக அரசாணை வெளியிடப்படுமா என்ற கேள்வி எழுந்தது. ஒரு கட்டத்தில், வன்னியர் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த தி.மு.க அரசு அரசாணையை வெளியிட்டது. இதனை எதிர்த்து 25 இற்கும் மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றத்தில் தொடரப்பட்டன.

“சாதி அடிப்படையில் இட ஒதுக்கீட்டினை வழங்க முடியுமா? இதுதொடர்பாக முறையான தரவுகள் இல்லாமல் இட ஒதுக்கீட்டை வழங்க முடியுமா என்பன உள்பட ஆறு கேள்விகளை எழுப்பினோம். அதற்கு அரசு அளித்த விளக்கம் போதுமானதாக இல்லை. எனவே, வன்னியர் சமூகத்தினருக்கான இடஒதுக்கீடு செல்லாது” என நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து பாட்டாளி மக்கள் கட்சி உட்பட வன்னியர் அமைப்பு கள் தீவிரமாக ஆலோசித்து வருகின்றன.

# சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார் ரஜினி

சென்னை, நவ. 02

சென்னை காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நடிகர் ரஜினிகாந்த் நேற்று முன்தினம் இரவு இரவு சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார்.

மயக்கம், வாய்க் குழறுதல் உள்ளிட்ட பாதிப்புகளோடு அவசரமாக காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ரஜினிகாந்த். மூளைக்குச் செல்லும் ரத்தக் குழாய்களில் ரத்த ஓட்டம் தடைப்பட்டதால் இந்த பாதிப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு ரஜினிகாந்த் காவேரி மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார். மூளைக்குச் செல்லும் ரத்த நாளமான கரோடிட் தமனியில் அடைப்பை நீக்கும் சிகிச்சை செய்யப் பட்டு, அதன்பின் கண்காணிப்பில் இருந்த ரஜினி நேற்று முன்தினம் இரவு வீடு திரும்பினார். போயஸ் கார்டன் வீட்டு வாசலில் ரஜினிக்கு ஆரத்தி எடுத்து அவரது குடும்பத்தி னர் திருஷ்டி கழித்து அவரை அழைத்துச் சென்றனர்.



முன்னதாக நேற்று முன்னர் காலை காவேரி மருத்துவமனையில் ரஜினியை தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் சந்தித்து நலம் விசாரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒன்றரை வருடங்களின் பின்னர் தமிழக பாடசாலைகள் ஆரம்பம்

சென்னை, நவ. 02

தமிழகத்தில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஒன்றரை ஆண்டுக் குப்பின் நேற்று முதல் பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. பெருந்தொகையான மாணவர்கள் உற்சாகத்துடன் பாடசாலைகளுக்கு வருகை தந்த நிலையில், ஆசிரியர்கள் அவர்களை வரவேற்றனர்.



தமிழகத்தில் கொரோனா பாதிப்பு அதிகரித்த நிலையில் கடந்த ஆண்டு (2020) மார்ச் மாதம் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கை தொடர்ந்து பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் மூடப்பட்டன.

பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டாலும், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மட்டும் திறக்கப்படாமலே இருந்து வந்தன. கொரோனா பாதிப்பு குறைந்ததை தொடர்ந்து, 17 மாதங்களுக்கு பிறகு கடந்த செப்ரெம்பர் 1 ஆம் திகதி 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பள்ளிகள் திறக்கப்பட்டன. கல்லூரிகளிலும் வகுப்புகள் தொடங்கப்பட்டது.

தற்போது கொரோனா பாதிப்பு வெகுவாக குறைந்த நிலையில், 19 மாதங்களுக்கு பிறகு 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பள்ளிக்கூடங்கள் நேற்று திறக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கு வந்த மாணவர்களை ஆசிரியர்கள் உடல் வெப்ப பரிசோதனை செய்தனர். தொடர்ந்து கையை சுத்தம் செய்தனர்.

பின்னர் முகக்கவசம் அணிந்து வந்த மாணவர்கள் வகுப்புகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். முகக்கவசம் அணிந்து வராத மாணவர்களுக்கு பள்ளிகள் சார்பில் முகக்கவசம் வழங்கப்பட்டது.

சென்னை மடுவின்கரை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில், மாணவர்களுக்கு ரோஜா பூ வழங்கி ஆசிரியர்கள் வரவேற்பு அளித்தனர். மழையையும் பொருட்படுத்தாமல் மாணவர்கள் பள்ளிக்கு உற்சாகமாக வந்தனர்.

# எங்களை ஓரம் கட்ட முற்படின் பெரமுனவுக்கு அரசியல் அழிவு

## கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை



கொழும்பு, நவ. 02

**"பங்காளிக்கட்சிகளை ஓரங்கட்டுவதற்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன முற்படு மானால் அங்குதான் 'அர சியல் அழிவு' ஆரம்பமாகும்."- என்று இலங்கை கம் யூனிஸ்ட் கட்சியின் உப தலைவரும், பாராளு மன்ற உறுப் பினருமான வீரசுமண வீரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மாற்று அரசியலுக்கான மேடையை நாமே உருவாக்கிக் கொடுத்தோம். அதன் ஊடாகவே சிறிலங்கா பொது ஜன பெரமுன என்ற கட்சி தோற்றம் பெற்றது. இதனை அந்தக் கட்சி உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது.

சிறு கட்சிகள் என்பதால் எம்மை தோற்கடிக்க , புறக்கணிக்க முற்பட்டால், அவ்வாறு முற்படுபவர்களுக்கே அரசியல் ரீதியில் அழிவு ஏற்படும். வர லாற்றில் அவ்வாறே நடந்தும் உள்ளது." -என்றார். (அ)





## செல்ல கதிர்காமம் வெள்ளத்தில் மூழ்கியது

கொழும்பு, நவ. 02

புனித பூமியான செல்ல கதிர்காமம் கோயில் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது.

கடும் மழையால் மாணிக்க கங்கையின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ள நிலையிலேயே ஆலயம் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளது.

## வாகனங்கள் விலை இறக்கம்

கொழும்பு, நவ. 02

சந்தையில் அதிகரித்திருந்த வாகனங்களின் விலைகள் தற்போது ஓரளவு குறைவடைந்து வருவதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர், வாகனங்களின் விலைகளில் மாற்றம் ஏற்படலாமென அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கட்டுப்படுத்த முடியாத வகையில் வாகன உதிரிப் பாகங்களின் விலைகள் அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின் றன. சில வாகனங்களின் உதிரிப்பாகங்கள், இறக்குமதி செய்யப்படும் நிறுவனங்களினாலே அதிக விலைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

## சந்தையில் தொடர்ந்தும் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, நவ. 02

விலை அதிகரிக்கப்பட்டுள்ளபோதிலும் சில இடங்களில் சமை யல் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

சில இடங்களில் சமையல் எரிவாயு பதுக்கி வைக்கப்பட்டுள் ளதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். நேற்று முன்தினம் குருநாகல் உள்ளிட்ட பல பகுதிகளில் சமையல் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு நிலவியதாகத் தெரியவந்துள்ளது.

## இரு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 02

இலங்கையில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக இரண்டு மாவட்டங்களில் உள்ள சில பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அதன்படி பதுளை மாவட்டத்தில் பசறை மற்றும் கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மன்னாரில் கடந்த மாதம் 273 பேருக்கு கொரோனா!

### மொத்த தொற்று 2393 ஆக அதிகரிப்பு

மன்னார், நவ. 02

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 31 ஆம் திகதிவரை 273 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த வருடம் மாத்திரம் 2376 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

மன்னார் மாவட்ட பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் நேற்று திங்கட் கிழமை விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேலும் புதிதாக 15 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை 273 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

மாவட்டத்தில் தற்போது வரை 23 கொரோனா மரணங் கள் நிகழ்ந்துள்ளன. மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் 2376 கொரோனா தொற்றா ளர்களும் மாவட்டத்தில் மொத்தமாக 2393 கொரோனா தொற்றாளர்களும் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 431 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன-என்றார்.(அ)

# வடமாகாண சுகாதார தொண்டர்கள் ஆளுநர் செயலகம் முன் போராட்டம்!

## நியமனத்தில் புறக்கணிப்பு என குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 02

நியமனத்தில் புறக்கணிக்கப் பட்ட சுகாதாரத் தொண்டர்கள் நேற்று வடக்கு ஆளுநர் செய லக முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றிய 970 பேரில் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் எடுத்த முயற் சியின் பயனாக 349 பேருக்கு அவர்களது சேவைக் கால அடிப்படையில் அரச நியமனத் துக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்நிலையில், ஏனை யோருக்கான நியமனம் இது வரை வழங்கப்படாத நிலை யில், தமக்கும் குறித்த நியம னத்தை வழங்குமாறு கோரி நேற்று வடக்கு மாகாண ஆளு நர் செயலக முன்றலில் நியம னம் வழங்கப்படாத வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதா ரத் தொண்டர்கள் கவனவீர்ப் புப் போராட்டத்தில் ஈடுபட்ட




னர்.

போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் கருத்து தெரிவிக்கையில்-

நாங்கள் நீண்ட காலமாக தொண்டு அடிப்படையில் சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றி வருகின்றோம். மொத்தமாக 970 பேர் வடக்கு மாகாணத்தில் உள்ளோம். ஆனால் 349 பேருக்கு மாத் திரமே நிரந்தர நியமனக் கடி தங்கள் வழங்கப்பட்டு தற் போது அவர்களுக்குரிய நிய மனம் நிறுத்திவைக்கப்பட்டுள் ளது.

அதன் அடிப்படையில் நாம் முன்வைக்கும் கோரிக்கை என்னவென்றால் வடக்கு மாகாணத்தில் உள்ள 970 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கு வதற்கு தற்போது வடக்கு மாகா ணத்துக்கு புதிதாக தெரிவு செய் யப்பட்டுள்ள புதிய ஆளுநர் நட வடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியே இன்றைய தினம் போராட்டத்தில் ஈடுபடு கிறோம்-என்றனர். (அ-03)

## சீனாவின் சேதன பசளைக் கப்பல் துறைமுகத்துக்குள் வரவேயில்லை



கொழும்பு, நவ. 02

அபாயகரமான பக்டீரியா அடங்கிய பசளையுடனான கப்பல் எந்த துறைமுகத்துக்குள் ளும் பிரவேசிக்கவில்லை எனக் கொழும்பு துறைமுகத்தின் கட் டுப்பாட்டாளர் தெரிவித்துள் ளார்.

அதற்கமைய, அந்தக் கப்ப லில் உள்ள பசளை இரண்டு முறை பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்டு நிராகரிக்கப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த கப்பல் நாட்டுக்குள் பிரவேசித் துள்ளதாக சில ஊடகங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டன.

இந்நிலையில் குறித்த பசளையை நிராகரித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தா னந்த அளுத்கமகே அண்மை யில் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், கடல் போக்குவரத்து தொடர்பான இணையத்தில் குறித்த கப்பல் நாட்டின் கடல் எல்லைக்குள் பிரவேசித்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. ஆயினும் கொழும்புத்துறைமுகத்தின் கட்டுப்பாட்டாளர் குறித்த தகவலை மறுத்துள்ளார்.

இது தொடர்பில் கரத்து தெரிவித்த அவர், ஹிப்போ ஸ்ப்ரீட் என்ற கப்பல் கொழும் புத் துறைமுகத்துக்குள் பிரவே சிக்கவில்லை என குறிப்பிட் டார். (அ)

# பொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கும்

## எஸ்.பி. திஸாநாயக்க தகவல்



கொழும்பு, நவ. 02

நாட்டுக்கு வருமானம் இல்லை. பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கொத்மலை - பூண்டுலோயா பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுலாத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஆடை ஏற்றுமதி ஆகியன பாதிக்கப்பட்டுள்ளதால் வருமான வழிகள் இழக்கப்பட்டுள்ளன. இதனால் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படக்கூடும். உலகளவில் இன்று பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இங்கும் அந்நிலைமை ஏற்படலாம். கப்பல் கட்டணம் நூற்றுக்கு 300 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் பொருளாதாரம் சரிந்தது. போர் முடிந்த பின்னர் 2015 ஆகும்வரை சிறந்த வளர்ச்சி மட்டத்தில் நாம் இருந்தோம். அடுத்த வருட இறுதியாகும்வரை முன்னேற்றம் ஏற்படலாம்.

யுகதனவி விவகாரத்தில் அரசியல், பொருளாதாரம் என இரு பக்கங்கள் உள்ளன. அவை தொடர்பில் புரிந்துணர்வு இல்லாமல் சிலர் கதைக்கின்றனர். யுகதனவி தொடர்பில் அரசு எடுத்துள்ள முடிவு சரியானது-என்றார். (அ)

# கல்வி அமைச்சுக்குள் குழப்பம்?



கொழும்பு, நவ. 02

கல்வி அமைச்சின் செயலாளருடன் இணைந்து தன்னால் பணியாற்ற முடியாது என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் முறையிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பதவிக்கு வேறொரு நபரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு தினேஷ் குணவர்த்தன பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் அதற்காக ஒருவருடைய பெயரை அவர் பரிந்துரை செய்துள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் தான் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிடம் உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அவசரமான தேர்தல்கள் எவையும் அவசியமில்லை

## கூறுகிறது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, நவ. 02

மாகாணசபைத் தேர்தல் அல்லது எந்தவொரு தேர்தலும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்கு அவசியம் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இந்த விடயத்தை செய்தியாளர் சந்திப்பொன்றில் வைத்து கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமது பிள்ளைக்கு உணவை பெற்றுத்தர முடியவில்லை என்ற காரணத்தினால், தாய் ஒருவர் பிள்ளையுடன் தற்கொலை செய்து கொண்டார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டின் நிலைமை தொடர்ந்தும் இதேபோன்று சென்றால் இதேபோன்று செய்திகளை கேட்க வேண்டியிருக்கும்.

எனவே அவசரமான தேர்தல்கள் எவையும் அவசியமில்லை-என்றார். (அ)

# இயற்கையோடு இணைந்து விவசாய புரட்சி அவசியம்

## உலகத் தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

**லண்டன், நவ. 02**

**இயற்கைக்கு எதிராக மனிதர்கள் செயல்படுவதற்குப் பதிலாக, அதனோடு மிகவும் இணைந்துச் செயல்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிலையான அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட புதிய விவசாய புரட்சியொன்று அவசியம் என்று எடுத்துரைத்தார்.**




ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டுக்கு இணையாக 'நைதரசனை மீண்டும் கண்டுபிடித்தல், காலநிலை மாற்றம், சுகாதார உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் நிலையான பொருளாதாரத்துக்கான தீர்வுகள் மற்றும் இணைச் செயல்பாடுகள்' என்ற தலைப்பின் கீழ் இலங்கை ஏற்பாடு செய்திருந்த விசேட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அந்நாட்டு நேரப்படி, நேற்று முன்தினம் மாலை 5.00 மணிக்கு இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

நிலையான அபிவிருத்தியே தமது அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பாகும் என்று எடுத்துரைத்த ஜனாதிபதி, காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனத்துக்கமைய, இலங்கையின் புதுப்பிக்கப்பட்ட தேசிய நிர்ணயங்கள் மற்றும் அபிலாஷைகள் என்பன நன்கு பிரதிபலிக்கின்றன என்று குறிப்பிட்டார்.

நவீன, விஞ்ஞான பொறிமுறைகள் மற்றும் பண்டைய வழிமுறைகள் ஊடாக, சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதே, தற்போது எமக்கு உள்ள சவாலாகக் காணப்படுகின்றது. இலங்கையில் விவசாயிகளிடையே, பல தசாப்தங்களாக சிறுநீரக நோய் பரவுவது பாரிய பிரச்னையாக உள்ளது.

இரசாயனப் பசளையை அதிகளவில் பயன்படுத்துவதே இதற்கு மிக முக்கிய காரணமாகியுள்ளது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இச்சூழ்நிலையிலேயே இரசாயனப் பசளை இறக்குமதியைக் குறைப்பதற்கும் சேதன விவசாயத்தை அதிகளவில் ஊக்குவிப்பதற்கும் எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது" என்றும் குறிப்பிட்டார்.

"இச்செயல்பாடுகள் பாரியளவில் பாராட்டப்பட்டாலும், ஒருசில விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றோம். இரசாயனப் பசளைப் பயன்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கும் குழுக்களுக்கு மத்தியில், அதிகளவில் பசளையைப் பயன்படுத்தி விளைச்சலை அதிகரித்துக் கொள்ளும் வழிவகைகளைக் கையாளப் பழகியிருக்கும் விவசாயிகளும் இதனை எதிர்க்கின்றனர். இலங்கையின் சிறந்த விவசாய உரிமைகளை அவதானிக்கும்போது, இந்நிலை மிகவும் வருத்தத்துக்குரியது" என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற வகையில் முகங்கொடுத்து வருகின்ற வளப் பற்றாக்குறைக்கு மத்தியிலேயே, சுற்றாடல் தொடர்பான இலங்கையின் முற்போக்கு நிகழ்ச்சி நிரல் செயற்படுத்தப்படுகிறது என்று தெரிவித்த ஜனாதிபதி , அபிவிருத்தித் திட்டங்களோடு அவ்வாறான நிகழ்ச்சி நிரல் ஒன்றை நடைமுறைப்படுத்துவதென்பது, விசேடமாக நோய்த் தொற்றின் பின்னர் அபிவிருத்தி அடைந்து வரும் அனைத்து நாடுகளுக்கும் பாரியதொரு சவாலாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான நாடுகளுக்கான அபிவிருத்தி உதவிகள், தொழில்நுட்பப் பரிமாற்றல்கள், திறன் அபிவிருத்தி, முதலீடுகள் மற்றும் நிதி உதவிகளையும் இயலுமான பங்களிப்புகளையும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் வழங்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள், அவற்றில் வர்த்தகத்துக்கு பாரியதொரு பொறுப்பு உள்ளதோடு மேலாண்மைக்காக முதலீடு செய்யும்போது, பாரியதொரு பிரதிபலன் கிடைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்காலச் சந்ததியினருக்காகவே, இந்தப் பூமியின் பாதுகாவலர்களாக நாம் அனைவரும் இன்று வாழ்ந்து வருகின்றோம் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி இயலுமான வகையில் அதற்குப் பங்களித்து, சுகாதார நலனை உறுதி செய்துகொள்வதற்காக அனைவரும் ஒன்றிணைந்துச் செயல்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அனைவரும் ஒற்றுமையாகவும் நல்லெண்ணத்துடனும் இதனை நடைமுறைப் படுத்துவோமாயின், மக்களுக்கும் எமுது பூமிக்கும் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் மேலும் தெரிவித்தார்.

100 சதவீதமளவில் பசுமை விவசாயத்துக்கு மாறுவதற்கான தீர்மானத்தை எடுத்துள்ள உலகின் முதல் நாடாக இலங்கை இருப்பதாகக் குறிப்பிட்ட சுற்றாடற்றுறை அமைச்சர் மஹிந்த அமரவீர, காலநிலை மாற்றத்துக்கான சிறந்த தீர்மானத்துடன்கூடிய பசுமை - சமூகப் பொருளாதாரத்தை உருவாக்குவதே அதன் நோக்கமாகும் என்றும் குறிப்பிட்டார்.

வரலாற்றுக் காலம் முதல் தற்போது வரை முன்னெடுக்கப்பட்டுள்ள நைதரசன் தொடர்பான கண்டுபிடிப்புகளுக்காக விஞ்ஞானிகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்த அமைச்சர், நைதரசன் கண்டுபிடிக்கப்பட்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இலங்கையும் அந்தச் சவாலை வெற்றிகொண்டு வருவதாகக் குறிப்பிட்டார். (அ)

# சேவை ஆரம்பித்த முதல் நாளில் இரண்டு ரயில்கள் மோதி விபத்து

கொழும்பு, நவ. 02

ராகம மற்றும் பெரலந்த ஆகிய இடங்களுக்கு இடையிலான ரயில் கடவையில் இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள் ளாகின.

இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

எனினும் எவருக்கும் பாதிப்புக்கள் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதான ரயில் மார்க்கத்தின் தெமட்டகொடை- பல்லேவெல ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையிலான கடவையில் சமிஞ்சை பிரச்னை காரணமாக ரயில் சேவைகளில் நேற்று காலை தாமதம் ஏற்பட்டது.

கோவிட் காரணமாக சுமார் 6 மாதங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான ரயில் சேவை இன்றே ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஏ-30 கோவிட் வைரஸ் திரிபு நாட்டுக்குள் பரவும் ஆபத்து

### சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 02

உலகின் பல நாடுகளில் கண்டறியப்பட்டுள்ள ஏ-30 என்ற கோவிட் வைரஸ் திரிபு இலங்கைக்குள் பரவும் ஆபத்து இருப்பதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

கோவிட் வைரஸ் தொற்று பரவுவதை தடுக்க தற்போது பயன்படுத்தப்படும் தடுப்பூசி மருந்துகளுக்கு ஈடுகொடுக்காத இந்த வைரஸ் திரிபு நாட்டுக்குள் பரவினால், மிகவும் அழிவான நிலைமை ஏற்படும் எனவும் அவர் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள அனைத்து கோவிட் வைரஸ் திரிபுகளும் இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளன.

இதனால், தற்போது பரவி வரும் புதிய திரிபு இலங்கைக்குள் பரவாது என்பதை உறுதியாக கூற முடியாது.

அந்த வைரஸ் திரிபு நாட்டுக்குள் பரவினால், தற்போது காணப்படும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றும் நிலைமையில், அது மிக வேகமாக பரவிச் செல்ல வாய்ப்புள்ளது.

இந்த புதிய வைரஸ் திரிபு நாட்டுக்குள் வராது என்று எம்மால் கூற முடியாது. இதுவரை உலகில்பரவிய அனைத்து வைரஸ் திரிபுகளும் மிகக் குறுகிய காலத்தில் இலங்கைக்குள் பரவின.

இதனால், புதிதாக பரவி வரும் வைரஸ் திரிபும் எதிர்காலத்தில் நாட்டுக்குள் வரலாம். வேகமாக பரவலாம். அப்படி நடந்தால், தடுப்பூசிகளை பெற்று அதனை நம்பி இருக்கும் மக்கள் மிகவும் சிரமமான நிலைமைக்கு தள்ளப்படுவர்.

இதன் காரணமாக சுகாதார வழிக்காட்டல்களை நாம் மிக கடுமையாக பின்பற்றவேண்டும்.

எதிர்காலத்தில் இப்படியான மேலும் பல வைரஸ் திரிபுகள் ஏற்படும் ஆபத்து உள்ளது. குறிப்பாக தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டோர் மத்தியிலேயே புதிய வைரஸ் திரிபு தொற்றுக்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

இதனால், அவர்களுக்குள் பரவும் வைரஸ் தடுப்பூசிகளுக்கு ஈடுகொடுக்காத நிலைமை அதிகரிக்கும் ஆபத்து எதிர்காலத்தில் ஏற்படலாம்-என்றார். (அ)

# இலங்கையை அண்மித்த பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை

கொழும்பு, நவ. 02

இலங்கையை அண்மித்த பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை இன்னும் நீடிப்பதாக வானிலை அவதான மையம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும். வேறு சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழையை எதிர்பார்க்கலாம்.

இதேவேளை இடியுடன் கூடிய மழையின்போது பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மக்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என கோரப்பட்டுள்ளது. (அ)

# பிரான்சிலிருந்து 6 வருடங்களின் பின் இலங்கைக்கு நேரடி விமான சேவை!

கொழும்பு, நவ. 02

இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான நேரடி விமான சேவை 6 வருடங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அங்கிருந்து புறப்பட்ட விமானம் நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. இதன் படி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் யு.எல். 564 நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

1980 களில் இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான முதலாவது நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 2015 இல், இந்த நேரடி விமானங்கள் நிறுத்தப் பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வீரவன்ஸ, கம்மன்பில மீது உடன் நடவடிக்கை தேவை

## ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் பெரமுன செயலாளர் வலியுறுத்து

கொழும்பு, நவ. 02

**அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறி செயல்பட்டு வரும் அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உள்ளிட்டோர் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கட்சி என்ற வகையில், ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுக்க உள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

இந்த தரப்பினரின் செயல்பாடுகள், நடத்தைகள் என்பன அரசாங்கத்தில் எதிர்கால இருப்புக்கு பாரிய அச்சுறுத்தல் மாத்திரமல்லது சிக்கலும் என்பதால், இந்த கோரிக்கையை விடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் சம்பந்தமான உரிய உடன்படிக்கை இன்னும் கைச்சாத்திடவில்லை என்பதால், அது குறித்து எந்த வகையிலும் குழப்பமடையவேண்டாம் என நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆளும் கட்சியின் தலைவர்களின் கூட்டத்தில் தெளிவாக கூறியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இந்த தரப்பினர் அடிப்படையின்றி அரசாங்கத்தை விமர்சித்து வருவது மிகவும் கீழ்த்தரமான செயல். இது வெளியில் இருந்து மேற்கொள் ளப்படும் ஏதோ ஒரு சூழ்ச்சிக்கு அமைய நடக்கின்றதோ என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட் டுள்ளது.

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அடிப்படை இணக்கப்பாட்டுக்கு மாத்திரமே தற்போது வந்துள்ளதாகவும் உடன்படிக்கையை தயாரிக்கும் முன்னர் கட்சிகளின் பரிந்துரைகளை முன்வைக்குமாறு நிதியமைச்சர் அந்த கூட்டத்தில் தெளிவாக கூறியிருந்தார்.



இப்படி நேர்மையாகவும் நெகிழ்வாகவும் செயற்படும் சந்தர்ப்பத்தில் இந்த தரப்பினர் செயற்படும் விதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

யாரது தேவைக்காக இவர்கள் இப்படி செயற்படுகின்றனர் என்ற பாரதூரமான கேள்வியும் சந்தேகமும் எழுந்துள்ளது.

அத்துடன் குறித்த உடன்படிக்கையை கட்டாயம் அமைச்சரவையில் தாக்கல் செய்வதாகவும் நிதியமைச்சர் அந்த கூட்டத்தில் உறுதியாக கூறினார்-என்றார். (அ)

# முகமாலையில் மிதிவெடி அகற்றலை பார்வையிட்டனர் சுவிஸ் பிரதிநிதிகள்

கிளிநொச்சி, நவ. 02

கிளிநொச்சி-முகமாலைப் பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட சுவிஸ் நாட்டின் பிரதிநிதிகள் ஸார்ப் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டதுடன், அது தொடர்பில் கலந்துரையாடினர்.




வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஸார்ப் எனும் அரச சார்பற்ற நிறுவனம் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில் சுவிஸ் நாட்டு நடவடிக்கை முகாமையாளர் ஒசா மற்றும் கெலன் ஆகியோர் முகமாலைப் பகுதிக்குச் சென்று ஸார்ப் நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் தளத்தை பார்வையிட்டனர்.

இதன்போது கண்ணிவெடி அகற்றப்பட்டுக் கையளிக்கப்பட்ட பிரதேசங்கள், தற்போது வேலை நடைபெறும் பிரதேசங்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள், தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவிக்கையில்,

ஸார்ப் நிறுவனமானது 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2021 ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவு பகுதியிலும் வெடிபொருட்கள் அகற்றும் பணியை முன்னெடுத்துள்ளனர். குறித்த பகுதியிலுள்ள 17,42 38 சதுரமீற்றர் பரப்பளவிலிருந்து 29, 763 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளனர்-என்றார். (அ)

# 48 மணி நேரம் மின் தடை?

கொழும்பு, நவ. 02

நாடு முழுவதும் உள்ள மின்சார சபை ஊழியர்கள் நாளை புதன்கிழமை கொழும்பில் ஒன்றுகூடி பெரும் போராட்டத்தை நடத்தவுள்ள நிலையில் நாட்டில் 48 மணி நேரங்களுக்கு மின் விநியோகத்தில் இடையூறுகள் ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் மின்சார விநியோகத்தை நிறுத்துவதன் மூலம் வேண்டுமென்ற பொதுமக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்க நாங்கள் விரும்பவில்லை. ஆனால் ஏதேனும் காரணங்களால் மின்சாரம் துண்டிக்கப்பட்டால் அதனை சரி செய்ய போராட்ட காலப் பகுதியில் கிட்டத்தட்ட 48 மணி நேரங்களுக்கு ஊழியர்கள் யாரும் வரமாட்டார்கள் என இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த கூட்டு தொழிற் சங்கத்தின் இணைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை கொழும்பில் செய்தியாளர் களிடம் பேசும்போதே ரஞ்சன் ஜெயலால் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

நவம்பர் 3ஆம் திகதி நாங்கள் மாபெரும் போராட்டத்தை நடத்தவுள்ளோம். இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை மின்சார சபை மற்றும் துறைமுக அதிகார சபையின் அனைத்து ஊழியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இதற்காக அவர்கள் நாடு முழுவதும் இருந்து வருவார்கள்.

இந்நிலையில் மின் விநியோகத்தில் தடங்கல்கள் ஏற்பட்டால் அதனைச் சரி செய்யயாரும் இருக்கமாட்டர்கள்-என்றார்.

இவ்வாறான போராட்டத்தால் கெரவலப்பிட்டி - யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அமெரிக்க நிறுவனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும் என நம்புகிறீர்களா? என அவரிடம் கேட்ட போது, அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளியிடும் போது அரசாங்கம் நிச்சயமாக அதற்குச் செவிசாய்த்தே ஆக வேண்டும்-என்றார். (அ)

# இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க மட்டக்களப்பில் திட்டமிட்ட நகர்வுகள்





**“ மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காராமுனை என்னும் பகுதியில் சுமார் 200 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றுவதற்கான செயற்பாடுகள் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதற்கு எதிராக குரல் கொடுக்கப்பட்ட காரணத்தினால் அது தொடர்பான தகவல்கள் தற்போது வெளிவந்திருக்கின்றன.**

**மட்டுநகரான்**

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இன்று உலகம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றது. கொரோனா காரணமாக நாடுகள் பொருளாதார நெருக்கடி, நாடு வழமை நிலைமைக்கு திரும்புவதில் தாமதம், இறப்பு வீதம் அதிகரிப்பு என பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றன. இப்போது இயல்பு நிலை திரும்பிக் கொண்டிருந்தாலும், பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்கு சில வருடங்கள் செல்லலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில், எதிர்வரும் 10ஆண்டுகளுக்குக் கடுமையான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமே இலங்கையைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவு மீட்க முடியும் என வல்லுநர்கள் தெரிவித்து வரும் நிலையில், அவ்வாறான செயற்பாடுகளில் கவனம் செலுத்ததாத இலங்கை அரசாங்கம், தமிழ் மக்களின் பகுதிகளில் எவ்வாறான சிங்களக் குடியேற்றங்களைச் செய்யமுடியும் என்ற ரீதியிலேயே சிந்தித்து செயற்படுவதைக் காணமுடிகின்றது.

இலங்கை தனது பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீளமுடியாத நிலையிலும், உள்ளூர் போராட்டங்களுக்கு தீர்வினை வழங்கமுடியாத சூழ்நிலையிலும், தமிழர் பகுதிகளில் எவ்வாறான ஆக்கிரமிப்புகளைச் செய்யமுடியும் என்பதிலேயே அதிக கவனத்தினைச் செலுத்தி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியான இனவிகிதாசாரத்தினை மாற்றுவதற்காக தமிழர்களின் பெரும்பான்மையைக் குறைப்பதற்காக எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமோ அவற்றினையெல்லாம் செய்து வருகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே தமிழர்கள் அதிகளவில் உள்ள மாவட்டமாகவுள்ள காரணத்தினால், இன்று மட்டக்களப்பு மாவட்டத்தினை இலக்கு வைத்து அரசாங்கம் செயற்படும் நிலையினைக் காண முடிகின்றது.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசியத்தின் தேவைப்பாட்டினை உணர்த்தும் வகையிலான பல்வேறு சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன. கடந்த காலத்தில் அபிவிருத்திக்காகவும், அற்ப சலுகைக்காகவும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு ஆதரவு வழங்கிய மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இன்று அவர்கள் என்ன செய்கின்றார்கள் எனத் தேடித் திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

அனைத்து விடயங்களிலும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிவரும் பாராளுமன்ற உறுப்பினர்களை கவனத்தில் கொள்ளாத நிலையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வரும் நிலையில், தங்களது சொந்தத் தேவைகளுக்காகவும், தங்களை சுற்றியுள்ள வர்களின் தேவைகளுக்காகவும் ஒரு சமூகத்தினையே படுகுழிக்குள் தள்ளும் செயற்பாடுகளில் மட்டக்களப்பில் உள்ள அரசு சார்பான பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு ஒன்றும் முன்வைக்கப்படுகின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மணல் கொள்ளைகள், காணி அபகரிப்புகளில் தீவிரமடைந்திருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக காணி ஆக்கிரமிப்புகளும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மிகவும் திட்டமிட்ட வகையில் மிகவும் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காராமுனை என்னும் பகுதியில் சுமார் 200 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றுவதற்கான செயற்பாடுகள் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதற்கு எதிராக குரல் கொடுக்கப்பட்ட காரணத்தினால் அது தொடர்பான தகவல்கள் தற்போது வெளிவந்திருக்கின்றன.

குறித்த பகுதியில் சிங்கள மக்களுக்கு காணி இருப்பதாகக் கூறி அம்பாறை மாவட்டம், பொலநறுவை மாவட்டத்திலிருந்து சிங்களவர்கள் அழைத்து வரப்பட்டு புனானையில் உள்ள வன இலாகா அலுவலகத்தில் காணி வழங்குவதற்கான நடமாடும் சேவை நடாத்தப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சேவையான காணி திணைக்களத்தின் இலங்கைக்காக ஆணையாளர் நேரடியாக வந்து இந்த நடமாடும் சேவையினை நடத்தியுள்ளார்.

குறிப்பாக ஒரு பிரதேச செயலகர் பிரிவில் காணி தொடர்பான பிரச்னைகள் அந்ததந்த பிரதேச செயலகத்தில் மக்கள் அழைக்கப்பட்டு பிரதேச செயலாளரினால் காணி தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. ஒரு பிரதேச செயலகப் பகுதியில் காணி தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் ஒரு பிரதேச செயலாளருக்கே இருக்கின்றது. ஆனால் இந்த விடயத்தில் கொழும்பிலிருந்து வந்த காணித் திணைக்களத்தின் பணிப்பாளர் சிங்கள மக்களை அழைத்து அது தொடர்பான நடமாடும் சேவையினை பிரதேச செயலகத்திற்கும் அறிவிக்காமல் நடத்தியதானது, இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கு தனியான சட்டம் ஒன்று இருப்பதாக காட்டிக்கொள்வதாகவே இருக்கின்றது.

குறித்த பகுதியில் 1976ஆம் ஆண்டுக்கு முன்னர் 190 சிங்கள குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டிருந்ததாகவும், அவர்கள் 1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்திற்க பின்னர் அங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றதாகவும் கூறி தங்களுக்கு அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்ட உறுதிபத்திரத்தினையும் சமர்ப்பித்துள்ளனர். ஆனால் அந்த உறுதிப்பத்திரங்கள் முழுமையான சிங்கள மொழியில் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறான ஒரு அனுமதிப்பத்திரம் இதுவரை மாவட்ட செயலகத்தில் வழங்கப்படவில்லையென மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த உறுதிப்பத்திரம் வழங்கப்படாமல் புதிதாக தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் கையொப்பமிட்ட காணி உத்தியோகத்தர் மட்டக்களப்பில் கடமையாற்றியவருமில்லை, மாவட்டத்தைச் சோர்ந்தவருமில்லை, அவர் அம்பாறையைச் சேர்ந்த உத்தியோகத்தர் என இது தொடர்பில் நீண்டகாலமாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த பகுதியானது நீண்டகாலமாக வனபரிபாலனத்திற்குரிய காணிகளாக அடையாளப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் நிலையில், அங்கு சிங்கள மக்களை திட்டமிட்டு குடியேற்றுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன. 2011ஆம் ஆண்டு 178குடும்பங்களைக் குடியேற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. திம்புலாகல பௌத்த தேரர் தலைமையில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு வாகரை பிரதேச செயலகத்தில் உள்ள காணிப்பிரிவு அதிகாரிகள் சிலர் துணையாக இருந்தனர். இங்குள்ள அரசியல்வாதிகளில் எடுபிடிகள்தான் இந்த அதிகாரிகள் மூலம் சிங்களக் குடியேற்றத்திற்கு துணை போகின்றனர். அப்போது நான் பாராளுமன்ற உறுப்பினராகயிருந்த காரணத்தினால் அன்று மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்திலிருந்த காணி அமைச்சருடன் கதைத்து அதனை தடுத்து நிறுத்தினேன்.

2015ஆம் ஆண்டு அந்த குடும்பங்களை குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அப்போது கிழக்கு மாகாண காணி ஆணையாளராக இருந்த அனுரா தர்மதாச என்பவர் அந்த குடியேற்றத்திற்கான நடவடிக்கையினை முன்னெடுத்தார். அப்போது ஆளுநராக இருந்த ஒஸ்டின் பெர்னாண்டோவின் கவனத்திற்கு கொண்டு சென்றபோது அப்போது மாகாண உதவி ஆணையாளராக இருந்த சாரிகா என்னும் சிங்களப் பெண்மணி குறித்த குடியேற முற்பட்டவர்களின் ஆவணங்களைப் பார்வையிட்டு, அவை பிழையான நடவடிக்கையென்று ஆளுநரிடம் கூறி அதனை தடுத்து நிறுத்தினார். மீண்டும் அந்த திம்புலாகல பௌத்த தேரர் 2017ஆம் ஆண்டு மீண்டும் அந்த சிங்கள மக்களை குடியேற்ற முற்பட்டார், அப்போதிருந்த ஐ.தே.கட்சி காணி அமைச்சரிடம் பேசியதையடுத்து அதுவும் நிறுத்தப்பட்டது.

மீண்டும் 2019ஆம் ஆண்டும் இதே முயற்சியை குறித்த பௌத்த தேரர் முன்னெடுத்தபோது, அன்று இருந்த மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டபோது அவற்றினை ஆராய்ந்து அவை போலியானது என நிராகரித்தார். குறித்த பகுதியில் சிங்கள மக்கள் 1983 ஆம் ஆண்டுக்கு முன்பாக வசித்திருந்தால், அவர்கள் தொடர்பான வாக்காளர் அட்டை உட்பட ஆவணங்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவை தொடர்பான எந்த பதிவும் இல்லாமல் போலியான ஆவணங்கள் கொண்டுவரப்பட்டு, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினைச் செய்ய முனைவதாகவும், அதற்குத் தாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இதேபோன்று பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை, கெவிழியாமடு ஆகிய பகுதிகளில் முந்திரிகைச் செய்கை என்ற நாமத்துடன் சிங்கள சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தலா மூன்று ஏக்கர் காணிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த முந்திரிகைச் செய்கை நடவடிக்கைகளுக்காக சுமார் 2500 ஏக்கர் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இந்த 2500 ஏக்கர் காணிகளும் பகிர்ந்தளிக்கப் படுமானால், சுமார் 850 சிங்களக் குடும்பங்களை தமிழர் பகுதிகளுக்குள் குடியேற்றுவதற்கான வாய்ப்புகள் காணப்படும்.

எனவே கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் இந்த அத்துமீறிய குடியேற்றங்களைத் தடுப்பதற்கு சர்வதேச ரீதியான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்திற்கு கொடுப்பதற்கு கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது காலத்தின் கட்டாயமாகும். ■

# இந்தியாவின் அக்னி-5; ஏவுகணையின் பலம் என்ன? எங்கெல்லாம் தாக்க முடியும்?

**கிட்டத்தட்ட முழு சீனா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகள் இந்த ஏவுகணை வரம்பில் வரும். அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்ட ஐம்பதாயிரம் கிலோ எடை கொண்ட இந்த ஏவுகணை 1500 கிலோ எடையுள்ள ஆயுதத்தைச் சுமந்து செல்லக்கூடியது. அதாவது இந்தியாவின் சக்தி வாய்ந்த ஏவுகணைகளில் இதுவும் ஒன்று.**





நேயாஸ் ஃபாருக்கி

ஐயாயிரம் கிலோமீற்றர் தூரம் வரை சென்று தாக்கக்கூடிய அக்னி-5 என்ற ஏவுகணையை ஒடிசாவில் உள்ள அப்துல் கலாம் தீவில் இருந்து இந்தியா புதன்கிழமை மாலை வெற்றிகரமாகச் சோதனை செய்தது.

"நைட் ஒப்ரேஷன் மோட்" முறையில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது செலுத்தப்பட்ட போது, ஏவுகணையின் திசை மற்றும் வேகம் நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் இருந்ததால் பதினைந்து நிமிடங்களில் இலக்கைத் தாக்கியது.

குறைந்தது 5500 கிலோ மீற்றர் தூரம் வரை செல்லக்கூடிய கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைக்கு இணையானது இது.இந்த வெற்றிகரமான சோதனையானது இப்போது இந்த ஏவுகணை முற்றிலும் பயன்படுத்தத் தயார் நிலையில் உள்ளது என்பதையும் குறிக்கிறது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நிலவும் பதற்றத்தைக் கருத்தில் கொண்டு இந்த ஏவுகணைச் சோதனை ஒரு முக்கியமான நிகழ்வாகப் பாதுகாப்பு நிபுணர்கள் கருதுகின்றனர்.

**அக்னி-5 ஏவுகணை என்பது என்ன?**

இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, ஐயாயிரம் கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலக்கை வெற்றிகரமாக நீண்ட தூரம் சென்று வெற்றிகரமாகத் தாக்கக்கூடிய ஏவுகணை இது.

அதாவது, கிட்டத்தட்ட முழு சீனா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகள் இந்த ஏவுகணை வரம்பில் வரும். அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்ட ஐம்பதாயிரம் கிலோ எடை கொண்ட இந்த ஏவுகணை 1500 கிலோ எடையுள்ள ஆயுதத்தைச் சுமந்து செல்லக்கூடியது. அதாவது இந்தியாவின் சக்தி வாய்ந்த ஏவுகணைகளில் இதுவும் ஒன்று.

**எளிதாக ஏவலாம்**

இந்த ஏவுகணை கேனிஸ்டரைஸ்(பெட்டியில் அடைக்கப்பட்டது) செய்யப்பட்டுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவிக்கிறது. அதாவது இது சாலை மற்றும் ரயில் இரண்டிலிருந்தும் ஏவப்படலாம்.

இதைக் குறைந்த கால அளவில் எளிதாக ஏவமுடியும் என்பது இந்த ஏவுகணையின் மற்றொரு சிறப்பம்சமாகும். அனைத்து வானிலைச் சூழலிலும் பாதுகாக்கப்படவும் ஏவப்படவும் இந்த கேனிஸ்டரைசேஷன் உதவுகிறது.

அக்னி-5 முதன்முதலில் 2012ஆம் ஆண்டு சோதனை செய்யப்பட்டது. இது வரை இந்த ஏவுகணை ஐந்தாறு முறை சோதனை செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசின் "ஸ்ட்ரேடஜிகல் ஃபோர்சஸ் கமான்ட்" என்ற துறையால், எந்த வெளியுதவியுமின்றி நடத்தப்பட்டதால், இந்தச் சமீபத்திய சோதனை அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இந்தத் துறை இந்தியாவின் அணு ஆயுதங்களுக்குப் பொறுப்பான துறையாகும்.

இந்தியா 1989 ஆம் ஆண்டு அக்னி-1 ஏவுகணை மூலம் அக்னி தொடர் ஏவுகணைகளைச் சோதிக்கத் தொடங்கியது. அக்னி-1 1000 கி மீ செல்லக்கூடிய நடுத்தர தூர ஏவுகணையாகும். அப்போது அமெரிக்கா, முன்னாள் சோவியத் யூனியன், சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் மட்டுமே பாலிஸ்டிக் ஏவுகணைகள் இருந்தன.

இதுவரை இந்தியப் பாதுகாப்புப் படைகளிடம் தற்போது வரை, 700 கி.மீ., தூரம் தாக்கும் அக்னி-1 ஏவுகணைகளும், 2000 கி.மீ., தூரம் தாக்கும் அக்னி-2 ஏவுகணைகளும், 2500 கி.மீ., வரை சென்று தாக்கும் அக்னி-3 ஏவுகணைகளும், 3500 கிலோ மீற்றர் வரை சென்று தாக்கும் அக்னி-4 ஏவுகணை களும் உள்ளன. அக்னி-5இன் நீண்ட தூரம் மற்றும் அணுசக்தி திறன் காரண மாக, சீனாவை மனதில் வைத்து இந்த ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளதாக நிபுணர்கள் கருதுகின்றனர். அதே நேரத்தில், பாகிஸ்தான் போன்ற நெருங்கிய இலக்குகளுக்கு பழைய அக்னி ஏவுகணைகள் போதுமானது என்றும் நிபுணர்கள் நம்புகின்றனர்.

**பிராந்தியத்தில் தாக்கம்**

அக்னி-5 இன் வெற்றிகரமான சோதனை, இந்தியாவின் கொள்கையான "க்ரிடிகல் மினிமம் டிடரன்ஸ்" அதாவது, "நம்பகமான குறைந்தபட்சத் தடுப்பு" மற்றும் முதலில் பயன்படுத்தக் கூடாது என்ற கொள்கைக்கு இணங்கவே அமைந்திருப்பதாக, இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா தனது அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்கள் தற்காப்புத் தன்மை கொண்டவை என்றும் அது "முதல் தாக்குதலுக்கு" அல்ல என்றும் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது.

இந்தியாவின் வெற்றிகரமான ஏவுகணைச் சோதனைக்கு சீனா இன்னும் எதிர்வினையாற்றவில்லை. ஆனால் செப்டம்பரில் அக்னி-5 ஏவப்படும் என்ற ஊடக அறிக்கைகள் குறித்துக் கருத்து தெரிவித்த சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் சியாவோ லிஜியன், அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவது அனைவருக்கும் நலம் பயக்கும் என்று கூறியிருந்தார். இதற்கு அனைத்துத் தரப்பினரும் சாதகமான முயற்சிகளை மேற்கொள்வார்கள் என நம்புகிறோம் என அவர் தெரிவித்திருந்தார்.

இந்த ஏவுகணைச் சோதனை, இந்தியாவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஆனால் சில பாதுகாப்பு வல்லுநர்கள் இதை மிகவும் கூர்மையாகக் கவனித்து வருகின்றனர்.

**விமர்சகர்கள் கருத்து**

பாதுகாப்புத் துறை விமர்சகரும் "டோர்ஸ்டெப்: மேனேஜிங் சைனா த்ரூ மிலிட்டரி பவர்" நூலின் ஆசிரியருமான பிரவின் சாவ்னி கூறுகையில், "அக்னி-5-ன் இந்த வெற்றிகரமான சோதனை முக்கியமானது, ஏனெனில் இந்த ஏவுகணை இப்போது ராணுவ பயன்பாட்டிற்கு வரும். ஆனால் சீனாவை எதிர்ப்பது தான் இதன் நோக்கம் என்றால், இந்தியா அதில் வெற்றி பெற்றுள்ளதா என்பது தான் இப்போது எழும் கேள்வி. மே 2020 இல், சீன இராணுவம் வந்து இந்திய நிலத்தை ஆக்கிரமித்ததைப் பார்த்ததால் நான் அப்படிக் கருதவில்லை." என்கிறார்.

அக்னி-5 இந்தியாவிற்கு செகன்ட் ஸ்ட்ரைக் அதாவது பதிலடி கொடுக்கும் திறனை வழங்குகிறது. ஆனால் சாஹ்னி, தடுப்புப் பணியை இது செய்யவில்லை. இந்தியாவை விட சீனா அதிக அணுசக்தி திறன் கொண்டது என்ற எளிய காரணத்தினால் பதிலடி கொடுக்கவும் இது உதவாது. இப்போது இந்த ஏவுகணை, சேவைக்கு வருவதைப்பற்றி மகிழ்ச்சியே. ஆனால் இந்தியா அதன் பயன்பாட்டு முறை மற்றும் அதன் அணுசக்தி கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கருதுகிறேன்" என்று கூறுகிறார்.



**- நன்றி:பி.பி.சி.**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்


38. நீர் ஊற்றுக்கள் வற்றாது பாதுகாக்கப் பயன்படும் மரம்
   1) இலுப்பை மரம் 2) மருதமரம் நாவல் மரம்

39. மரமுந்திரிப் பழத்தில் அதிகளவு அடங்கியுள்ள போசணைக் கூறு
   1) விற்றமின் D 2) விற்றமின் C 3) விற்றமின் B

40. ஔடதப் பயன்பாட்டின்போது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயம்
   1) மருந்தின் நிறம் 2) தயாரித்த நிறுவனம் 3) பருக வேண்டிய அளவு

41. இலங்கையில் மரச்செதுக்கல் வேலைப்பாட்டிற்கு புகழ்போன தேவாலயம் அமைந்துள்ள மாவட்டம்.
   1) கண்டி 2) மாத்தளை 3) மொனராகல

42. அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய் அல்லாதது
   1) கல்லீரல் அழற்சி 2) மஞ்சட்காமாலை 3) குடற்புண்நோய்

43. 
   அருகிலுள்ள மின்சுற்றிலுள்ள மின்குமிழ்
   1) ஒளிரும்
   2) ஒளிராது
   3) கூறமுடியாது

44. "நாளாந்த வாழ்க்கையில் நாம் பயன்படுத்திய பின் கழித்தொதுக்கும் பொருள்களை, மீளப் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றுதல் என்பது 3R எண்ணக்கருவில் எதனுள் அடங்கும்
   1) பயன்பாட்டைக் குறைத்தல் 2) மீளப் பயன்படுத்தல்
   3) மீள் சுழற்சிப்படுத்தல்

45. நிறமூட்டப்பட்ட நீர் உள்ள கண்ணாடிக்குவளைக்குள் பனிக்கட்டியை இட்டபோது யாது நிகழாது.
   1) கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நிறமுள்ள நீர்த்துளிகள் படிந்திருக்கும்
   2) கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் கீழே வடியும்
   3) கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் படிந்திருக்கும்

46. "ஆனகட்டி ஏலேலப்படி சேர்குழப்பி....." இது எவ்வகைப் பாடல்
   1) மீனவர் பாடல் 2) சேனைப் பாடல் 3) உழவர் பாடல்

47. முற்காலத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையில் பயிர்களின் பாதுகாப்பிற்காக கையாண்ட பாரம்பரியமான உத்திகளில் அடங்காதது.
   1) தடிவேலி அமைத்தல்
   2) சாம்பல் இடல்
   3) இரசாயனக் கிருமிநாசினி தெளித்தல்

48. இலங்கையின் கரையோரப் புகையிரதப் பாதையாக அமைவது
   1) கொழும்பிலிருந்து மாத்தறைக்கானது
   2) கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கானது
   3) கொழும்பிலிருந்து அவிசாவளைக்கானது
   4)

49. அதிகளவு நீரை தேக்கிவைக்கக்கூடிய மண்
   1) மணல் மண் 2) களி மண் 3) தோட்ட மண்

50. வீதியில் சாரதி வாகனத்தை செலுத்த வேண்டிய பக்கம்
   1) வலப்பக்கம் 2) இடப்பக்கம் 3) நடுப்பக்கம்

51. நாம் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதனால் நாட்டிற்கு கிடைக்கும் நன்மை அல்லாதது
   1) நாட்டின் தனித்துவம் பாதுகாக்கப்படும்
   2) பண்பாட்டை சந்ததியாகக் கையளிப்பது இலகுவாகும்
   3) பண்பாட்டுப் பெறுமானம் நாளுக்குநாள் குறைவடையும்

52. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்களை மாத்திரம் கொண்ட விடை.
   1) முருங்கை, சீதேவியார் செங்கழுநீர், எருக்கலை
   2) சீதேவியார் செங்கழுநீர், இலவம் பஞ்சு, துத்திரி
   3) முருங்கை, ஆடையொட்டி, கமுகு

53. பிராணிகளின் அழிவிற்கு மனிதனால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை
   1) காடுகளைப் பாதுகாத்தல்
   2) இரசாயனப் பசளை, பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தல்
   3) பிராணிகளை வேட்டையாடாதிருத்தல்

54. வீட்டில் நாம் தனியாகப் பயன்படுத்தும் பொருட்கள் அடங்கிய கூட்டம்
   1) சவர்க்காரம், உணவுத்தட்டு, வானொலி
   2) தலையணை, துவாய், பற்தூரிகை
   3) உணவுத்தட்டு, தேநீர்க்கோப்பை, தொலைக்காட்சி

55. பல்கூட்டுச் சந்தைகளில் பணக்கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் முறை அல்லாதது
   1) கடனட்டை 2) வீசா அட்டை 3) குடும்ப அட்டை

56. உடன் உணவுகளை அதிகம் உண்பதால் ஏற்படக்கூடிய பாதிப்பு
   1) சுகாதாரத்திற்கு நல்லது
   2) உடல் நிறை அதிகரித்தல்
   3) போசாக்கானதாக இருத்தல்

57. சமூக விரோதச் செயல் அல்லாதது
   1) போதைப் பொருள் விற்பனை
   2) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்
   3) சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்புதல்

58. பொது இடங்களில் மனிதர்களுக்கு ஏற்படும் அசௌகரியம்
   1) பஸ் வண்டியில் உரத்த சத்தத்துடன் பாடல்கள் ஒலித்தல்
   2) வரிசையாக நின்று செல்லுதல்
   3) வெள்ளைக் கோட்டின் ஊடாகப் பாதையைக் கடத்தல்

59. மருந்தாகப் பயன்படும் வேர்
   1. நன்னாரி 2) கத்தரி 3) மா

60) இந்த ஆண்டிற்கான "சிறந்த மாணவர் விருதுக்காக நீர் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்" எனக் காலைக்கூட்டத்தில் உமது அதிபர் அறிவிக்கின்றார். அச்சந்தர்ப்பத்தில் உமது மனதில் தோன்றிய உணர்வுகளைக் கொண்டதாக மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டல்களும் சரியாக இருத்தல் வேண்டும்.)

i) ....................................................................................................
....................................................................................................

ii) ....................................................................................................
....................................................................................................

iii) ....................................................................................................
....................................................................................................

***

# 'மொட்டு'வின் பங்காளித் தலைவர்கள் உடன் வெளியேற வேண்டும்!

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன வலியுறுத்து



கொழும்பு, நவ. 02

"சிறிலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் பங்காளிக் கட்சிகள் இரட்டை வேடம் போடாமல் அரசிலிருந்து உடனடியாக வெளியேறுவதே உத்தமம்."

- இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

"அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில போன்றோர் ஆளும் கட்சியின் கூட்டத்தில் ஒன்றைக் கூறி விட்டு, வெளியில் சென்று இன்னுமொன்றைக் கூறுவதை சிறிலங்கா பொதுஜன முன்னணி என்ற வகையில் எம்மால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் என்ற வகையில் எமக்கு கூட்டுப் பொறுப்பு உள்ளது. கட்சிக் கூட்டத்தில் ஒன்றைக் கூறி விட்டு, வெளியில் சென்று இன்னுமொன்றைக் கூறும் போது சிறிலங்கா பொதுஜன முன்னணி என்ற வகையில் எம்மால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

நாங்களே பிரதான தாய்க் கட்சி என்பதே இதற்குக் காரணம். எமது கட்சி அடிபணிய விரும்பாது. நாய்தான் வாலை ஆட்ட வேண்டும், வால் நாயை ஆட்டாது என்பதை நாங்கள் தெளிவாகக் கூற வேண்டும்.

சத்தங்களைக் கண்டு நாங்கள் அஞ்ச மாட்டோம். எமக்கும் அந்தப் பட்டறையின் சத்தம் பழக்கமானது. இரும்புச் சத்தமும் பழக்கமானது. வாள்களின் சத்தமும் பழக்கமானது.

பொறுத்தமில்லை என்றால் என்ன செய்ய வேண்டும், விவாகரத்துச் செய்ய வேண்டும். பெண் விரும்பும் நபரை மண முடிப்பதற்காக விவாகரத்துச் செய்ய முடியும். ஆண் விரும்பிய பெண்ணை மணந்துகொள்ள முடியும்" - என்றார். (இ)

# அரச பங்காளிகளை நீக்கும் உரிமை யாருக்கும் இல்லை

## ரோஹிதவுக்கு வாசுதேவ பதிலடி



கொழும்பு, நவ. 02

**"சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கோ, அதில் இருக்கும் நபருக்கோ, அணிக்கோ அரசின் கூட்டணிக் கட்சிகளை நீக்கும் உரிமை யில்லை."**

- இவ்வாறு பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பிரதிநிதிகள், அரசில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகள் சம்பந்தமாக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் சிங்கள வானொலி நிகழ்ச்சி ஒன்றில் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

"அரசு என்பது என்ன என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரசு என்பது கூட்டணி அரசு. கூட்டணி அரசில் கூட்டணிக் கட்சியினருக்கு இடையில் வெவ்வேறான நிலைப்பாடுகள் இருப்பது சாதாரணமானவை.

தற்போதைய அரசு நாங்கள் அனைவரும் இணைந்து உருவாக்கிய அரசு. அவ்வாறு உருவாக்கிய அரசில் இருந்தவாறு எமது நிலைப்பாடுகளைக் கூற உரிமையில்லை என்று கூறுவார்கள் எனில், அதனைத் தீர்மானிப்பது நீதிமன்றத்தில் அல்ல, அரசியல் ரீதியாகவே தீர்மானிக்க வேண்டும்.

யார் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்? இவர்களே எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக எமது கூட்டணிக் கட்சியின் தலைவர் ஒருவருக்கு எதிராக முதலில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தனர். ஒரே அரசுக்குள் இருந்துகொண்டு இதனை எப்படிச் செய்ய முடியும்?

தற்போது இந்தப் பிரச்னையைப் பெரிதாக எடுத்துக்கொண்டுள்ளனர். இது அரசுக்குள் பேசித் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்னை என்று கூறும் அளவுக்கு சிலர் மோசமானவர்களாக மாறியுள்ளனர். அப்படியானால், இவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

அவர்களால் தனித்துத் தீர்மானங்களை எடுக்க முடியாது. அனைவரும் இணைந்தே அரசை உருவாக்கினோம். அப்படியானால், அனைவருக்கும் பொருந்தும் வகையில் ஒருவரால் எப்படித் தீர்மானங்களை எடுக்க முடியும்?

உலகத்துக்கு சட்டத்தை உருவாக்க வேண்டுமாயின் அனைவரும் இணைந்து உருவாக்க வேண்டும் என சீன ஜனாதிபதி ஷீ. பின்ஜின் கூறியிருந்தார். அமெரிக்கா தனித்து அதனை உருவாக்க முடியாது. தீர்மானங்களை எடுக்க வேண்டுமாயின் நாங்கள் அனைவரும் இணைந்து எடுக்க வேண்டும். அதனை விடுத்து தனிக் கட்சியால் தீர்மானங்களை எடுக்க முடியாது" - என்றார். (இ)

# நீரில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

கல்முனை, நவ. 02

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணைப் பகுதியில் நீரில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பெரியநீலாவணையைச் சேர்ந்த 21 வயதுடைய சுலைமான் லெப்பை சராப்கான் என்ற இளைஞரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

நண்பர்களுடன் ஓடை ஒன்றில் நீராடச் சென்ற நிலையில் அவர் நீரில் மூழ்கியுள்ளார்.

அவர் உடனே மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கல்முனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ)



# மேலும் 28 பேர் கைது!

கொழும்பு, நவ. 02

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில், நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 81 ஆயிரத்து 549 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# இராஜாங்க அமைச்சர்கள் எனக்கு எதிராகச் சேறுபூசும் பிரசாரங்கள்!

## மைத்திரி பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 02

சில இராஜாங்க அமைச்சர்கள் எனக்கு எதிராகச் சேறு பூசும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பக்கமுன நகரில் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளைச் சந்திக்கச் சென்றிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"விவசாயிகள் குறித்து தற்போதைய அரசிடம் நான் எந்த அளவுக்குப் பேசினாலும் அரசு செவிமடுப்பதில்லை. கமத்தொழில் அமைச்சர் விவசாயத்தை அறிந்தவர் அல்லர். நான் பல முறை கமத்தொழில் அமைச்சருடன் விவசாயிகளின் பசளைப் பிரச்னை பற்றி பேசினேன். எனினும், சாதகமான பதில் கிடைக்கவில்லை.

சில இராஜாங்க அமைச்சர்கள் எனக்கு எதிராகச் சேறு பூசும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னை காரணமாக என்னால், பொலனறுவைக்குச் செல்ல முடியாதுள்ளது என நான் கூறினேன். அதனை அடிப் படையாகக் கொண்டே இராஜாங்க அமைச்சர்கள் எனக்கு எதிராகச் சேறு பூசும் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளனர். அவற்றை நான் கவனத்தில் கொள்ளப் போவதில்லை" - என்றார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் கேள்வி ஒன்றை எழுப்பிய விவசாயி ஒருவர், "நீங்கள் மீண்டும் பதவிக்கு வந்தால் விவசாயிகளுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?" எனக் கேட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த மைத்திரிபால, "நான் விவசாயிகளை கஷ்டத்தில் தள்ளமாட்டேன். சேதனப் பசளை மூலம் நெல்லைப் பயிரிடுவது குறித்து விவசாயிகளுக்குப் படிப்படியாகப் பழக்கப் படுத்துவேன்.

உலகில் எந்த நாடும் நூற்றுக்கு நூறு வீதம் சேதனப் பசளையைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதில்லை.

அவுஸ்திரேலியா கூட சுமார் 50 வீதமே சேதனப் பசளையைப் பயன்படுத்தும் விவசாயத்தைச் செய்கின்றது. நான் 1980ஆம் ஆண்டுகளில் இருந்து விவசாயிகளுக்காகக் குரல் கொடுத்து வருகின்றேன்.

விவசாயிகள் விஷத்தை அருந்தி தற்கொலை செய்துகொள்ளும் சந்தர்ப்பத்தில் நான், விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காகப் பொலனறுவை நகரில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி முதல் முறையாகச் சவப் பெட்டிகளைக் கூடச் சுமந்திருக்கின்றேன்" - என்றார். (இ)

# ஜப்பான் பாராளுமன்ற தேர்தல் ஆளும் ஜனநாயக கட்சி வெற்றி!

ரோக்கியோ, நவ. 02

ஜப்பான் தேர்தலில் பிரதமர் புமியோ கிஷிடா தலைமையிலான ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி பெரும் வெற்றி பெற்றுள்ளது.

ஜப்பான் பாராளுமன்றத் தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முழுமையாக கடைபிடித்து, பலத்த பாதுகாப்புடன் நடந்த இந்த தேர்தலில் வாக்கு பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.

தேர்தல் முடிவில், ஆளும் லிபரல் ஜனநாயக கட்சிக்கு 291 ஆசனங்கள் கிடைத்துள்ளன. லிபரல் ஜனநாயக கட்சியின் கூட்டணி கட்சி 32 ஆசனங்களை கைப்பற்றியது. இந்த வெற்றியின் மூலம் புமியோ கிஷிடா மீண்டும் ஆட்சியை கைப் பற்றியுள்ளார்.

ஜப்பான் பிரதமரும் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான புமியோ கிஷிடா, ரோக்கியோவில் உள்ள கட்சித் தலைமையகத்தில் வெற்றியை கொண்டாடினார். வெற்றி குறித்து அவர் கூறுகையில், "தொற்றுநோயில் இருந்து விரைவில் மீண்டெழுவது, அதற்கு கூடுதல் பட்ஜெட் உள்ளிட்டவை எதிர்கால திட்டங்களாகும். பெரிய கொள்கை சவால்களை எதிர்கொள்கிறேன். எனினும் வலுவான



தேர்தல் வெற்றி கைகொடுக்கிறது. பயன்படுத்துவேன். "இது மிகவும் கடினமான தேர்தல், ஆனால் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்பது மக்களின் விருப்பம். 261 இடங்களை மக்கள் வழங்கியுள்ளார்கள். ஒரு பொறுப்பான கட்சியாக செயல்படுவோம்."- என்றார். (ஐ)



# கத்திக்குத்து தாக்குதலில் ஜப்பானில் 17 பேர் காயம்!

ரோக்கியோ, நவ. 02

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் சுரங்க ரயிலில் இடம்பெற்ற கத்திக்குத்து மற்றும் தீ வைப்பு சம்பவங்களில் குறைந்தது 17 பேர் காயமடைந்தனர்.

காணொலி காட்சிகள் பயணிகள் தீப்பிழம்பிலிருந்து யன்னல்கள் ஊடாக வெளியேறுகின்றமையை காட்டுகின்றன.

இந்த சம்பவம் ரோக்கியோவின் மேற்கு புறநகர் பகுதியலில் இடம்பெற்றது. உள்ளூர் நேரப்படிநேற்றுமுன்தினம் 8 மணிய ளவில் இடம்பெற்றது. இந்த சம்பவத்துடன் 20 வயது நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குறித்த நபர் கொமிக்ஸ் கதையின் கதாபாத்திரங்களில் வருவது போன்று பிரகாசமான ஊதா, பச்சை நிற உடை யில் இருந்தார் என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபர் ரயிலில் ஏற முன்னர் திரவைம் ஒன்றை அதன்மீது தெளித்தார். அது தீப்பற்றியதில் முதியவர் ஒருவர் மயக்கமடைந்தார். மூவர் காயங்களுக்கு இலக்காகினர். இதன்போதே சிதறி ஓடிய பயணிகள் மீது குறித்த நபர் கத்திக் குத்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

ஓகஸ்ட் மாதம் ரயில் ஒன்றில் நடந்த கத்திக் குத்தில் 10 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஸ்பெயினில் அரியவகை வெள்ளை சிங்க குட்டிகள்!

மட்ரிட், நவ. 02

தெற்கு ஸ்பெயினில் உள்ள விலங்குகள் காப்பகத்தில் அரிய வகை வெள்ளை நிற இரு ஆபிரிக்க சிங்கக் குட்டிகள் பிறந்துள்ளன. பிறந்து எட்டு நாட்கள் ஆகும் ஆண் மற்றும் பெண் வெள்ளை சிங்கக் குட்டிகள் அண்டலூசியா பகுதியில் உள்ள மலைக் கிராமமான ஜிமெனா டி லா புரோன்டெராவில் இருந்து உணவளிப்பதற்காக சிறப்பு அறைக்கு மாற்றப்பட்டன.

இந்த சிங்கக்குட்டிகளின் பெற்றோர்கள் சாதாரண ஆபிரிக்க சிங்கங்கள் ஆகும். எனவே, அவைகளிடம் இருந்து வெள்ளை சிங்கங்கள் பிறந்துள்ளமை விலங்கியலாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

உலகளாவிய வெள்ளை சிங்கங்கள் பாதுகாப்பு அறக்கட்டளை, இந்த விலங்குகள் அல்பினோக்கள் இல்லை என்றும் இவை தென்னாபிரிக்காவின் குருகர் தேசிய பூங்காவில் உள்ள கிரேட்டர் திம்பாவதி பகுதியின் அரிய மரபணு என கூறியுள்ளது.

1930களில் வெள்ளை சிங்கங்கள் இனப்பெருக்கத்திற்காகவும் வேட்டைக்காகவும் காடுகளில் இருந்து அகற்றப்பட்டு சிறைபிடிக்கப்பட்டன. தற்போது 13இற்கும் குறைவான வெள்ளை சிங்கங்களே அவற்றின் இயற்கையான வாழ்விடங்களில் வாழ்கின்றன என கூறப்படுகிறது.

இதற்கு காரணம் அவை தற்போதைய அறிவியலால் வேறுபட்டவை என அங்கீகரிக்கப்படாததால் சட்டத்தால் பாதுகாக்கப்படவில்லை என்பதே ஆகும். வெள்ளை சிங்கங்கள் பாந்தெரா லியோ என வகைப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ)

# எதிர்கால நம்பிக்கையுடன் வாழ்வை ஒளிர செய்யுங்கள்!

*பாப்பரசர் பிரான்சிஸ் தீபாவளி வாழ்த்து*

ரோம், நவ. 02



இந்து மக்களுக்கு கிறிஸ்தவ மக்களின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் இந்து மக்கள் தீபாவளி பண்டிகையை கொண்டாடுகின்றனர். இந்த நிலையில் இது தொடர்பில் வத்திக்கான் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில், "தற்போதைய பெருந்தொற்றுநோய், அதனால் ஏற்பட்டுள்ள உலகளாவிய நெருக்கடிகள் ஆகியவற்றில் இருந்து எழுகிற கவலை மற்றும் நிச்சயமற்ற நிலையில்கூட இந்த தீபாவளி பண்டிகையை கொண்டாடுவது, எதிர்காலத்துக்கான நம்பிக்கையுடன் உங்கள் வாழ்க்கையை, வீடுகளை, சமூகங்களை ஒளிரச் செய்யுங்கள்.

"பெருந்தொற்றின் முதல் மற்றும் இரண்டாவது அலைகள், மக்களின் உயிர்களையும், வாழ்வாதாரத்தையும் சிதைத்துள்ளது. பலரும் வேலை இழந்து, விரக்தி உணர்வில் உள்ளனர். இந்த சவாலான தருணங்களில் நாம் கிறிஸ்தவர்களும், இந்துக்களும் மக்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஏற்ற முடியும்.

"மதங்களுக்கு இடையேயான ஒற்றுமையின் மூலம் மக்களின் வாழ்வில் ஒளியை ஏற்றுவது, சமூகத்தில் மத மரபுகளின் பயன் மற்றும் வளத்தை உறுதிப்படுத்துகிறது - என்றுள்ளது. (ஐ)

# கொரோனா 5ஆவது அலை பாகிஸ்தானை தாக்கும்!

இஸ்லாமாபாத், நவ. 02

கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி மிக மெதுவாக நடைபெறுவதால், பாகிஸ்தானில் ஐந்தாவது அலை உருவாகும் அபாயம் இருப்பதாக அந்நாட்டு சுகாதாரத் துறை மூத்த அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

ஓரளவுக்கு பாகிஸ்தான் அரசு கொரோனா தடுப்பூசி இலக்கை எட்டியுள்ளது. ஆனல், பாகிஸ்தானில் இன்னமும் பல இலட்சக்கணக்கான மக்கள் கொரோனா தடுப்பூசி பெறாமல் உள்ளனர் என்று பிரதமரின் உடல்நலம் தொடர்பான சிறப்பு உதவியாளர் மருத்துவர் ஃபைசல் சுல்தான் தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசி செலுத்தும் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்காவிட்டால், நாட்டில் கொரோனா ஐந்தாவது அலை எழக் கூடும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

இதுவரை நாட்டில் 26 சதவீத மக்கள் கொரோனா தடுப்பூசியை முற்றிலும் செலுத்திக் கொண்டுள்ளனர். மேலும், 20 சதவீதம் பேர் முதல் டோஸ் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

# கோவக்சின் தடுப்பூசிக்கும் அவுஸ்திரேலியா அங்கீகாரம்!

சிட்னி, நவ. 02


இந்தியாவின் தயாரிப்பான கோவக்ஸின் கொரோனா தடுப்பூசிக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன்படி, கோவக்ஸின் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் அவுஸ்திரேலியா நாட்டிற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள நாடுகள் தங்கள் நாட்டுக்கு வரும் பயணிகள் குறிப்பிட்ட தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள வேண்டும் என்று பட்டியலிட்டு வருகின்றன. அந்தவகையில் ஒவ்வொரு தடுப்பூசியாக ஆய்வு செய்து ஒப்புதல் வழங்கி வருகின்றன.

இதன்படி, இந்தியாவின் கோவக்ஸின் கொரோனா தடுப்பூசிக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது. கோவக்ஸின் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் தனிமைப்படுத்தாமல் நேரடியாக தங்கள் நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கிளாஸ்கோ மாநாட்டில் சீனா பங்கேற்கவில்லை!



கிளாஸ்கோ, நவ. 02

கிளாஸ்கோவில் நடைபெறும் பருவநிலை மாநாட்டில் சீனா கலந்துகொள்ளவில்லை.

சீனாவின் எஸ். ஓ. ஏ. எஸ். இன்ஸ்ரிரியூட்டின் இயக்குநர் பேராசிரியர் ஸ்டீவ் சாங் இதுகுறித்து தனது கருத்தை தெரிவித்திருக்கிறார்.

"தன்மீது நேர்மறையற்ற வெளிச்சம் சிறிதாயினும் விழுவதற்கு சீனா விரும்பவில்லை என்பதையே இது காட்டுகிறது என்கிறார் ,"அவர்.

மேலும், "சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு எங்கும் பயணம் மேற்கொள்ளவில்லை. எனவே, இந்த மாநாட்டில் அவர் கலந்து கொள்ளாதது ஆச்சரியம் அளிக்கவில்லை, ஆனால், இணையம் மூலமாகவும் அவர் கலந்து கொள்ளாதது ஒரு புதிய செய்தியை சொல்கிறது," என்றார்.

பருவநிலை மாற்றத்தை கையாள்வது சீனாவுக்கு முக்கியமான ஒன்று. ஆனால், நாடு அதே நேரத்தில் மின்சார தட்டுப்பாடுகளை எதிர்கொண்டு வருகிறது. மின்சாரம் இல்லாத சூழல் ஜி ஜின்பிங்கிற்கு அவப்பெயரையே ஏற்படுத்தும் என்றும் கூறப்பட்டது.

# அதிகமாக பரவுகின்றது கொரோனா; சிந்தித்து செயல்பட வேண்டும் மக்கள்

## இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, நவ. 02

**“சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள போதிலும், நாட்டில் கொரோனாத் தொற்று நோய் இன்னும் அதிகமாகப் பரவி வருவதால் மக்கள் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.”**

- இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாரஹன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் நேற்று முன்னணி இராணுவத்தினருக்குப் பூஸ்டர் தடுப்பூசியை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“அன்றாடம் 500 முதல் 600 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றாளர்களது எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

மக்களின் வாழ்க்கையைக் கருத்தில்கொண்டு மாகாணங்களுக்கு இடையேயான கட்டுப்பாடுகள் உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

எனவே, மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பெறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்” - என்றார். (இ)



---



## மாகாணங்களுக்கு இடையிலான பொதுப்போக்குவரத்து ஆரம்பம்!

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை நேற்று முன்தினம் நீக்கப்பட்ட நிலையில், நேற்றுக் காலை முதல் மாகாணங்களுக்கு இடையில் பொதுப்போக்குவரத்துச் சேவையும் ஆரம்பமானது.

இதன்படி வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தின் பிரதான நகரங்களில் இருந்து கொழும்பு உட்பட இதர பகுதிகளுக்கான பஸ் சேவை இடம்பெற்றது.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பயணிகளை ஏற்றிச் செல்லும் நடைமுறையைத் தொடர்ந்தும் கடைபிடிக்குமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, சுகாதார நடைமுறையை மீறும் பஸ்களின் அனுமதிப்பத்திரம் முடக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம எச்சரித்துள்ளார். (இ)

---

## மண்மேடு சரிந்து வீடு பாரிய சேதம்

பதுளை, நவ. 02

பதுளை, அப்புத்தளை ரயில் வீதி பகுதியில், வீடொன்றின் மீது நேற்று அதிகாலை மண்மேடு சரிந்து விழுந்ததில் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்று அப்புத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனர்த்தம் இடம்பெறும் போது வீட்டில் இருந்தவர்கள் வெளியேறியுள்ளதால் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் அவர்களது உறவினர் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (இ)



---

## வீதி விபத்துக்களில் சிக்கி 2 நாட்களில் 12 பேர் மரணம்

கொழும்பு, நவ. 02



நாட்டில் கடந்த இரு நாட்களில் (சனி , ஞாயிறு) இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“விபத்துக்களால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர், பொதுமக்களுக்கு வீதிகளில் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் வீதிகளில் பயணிக்கும் வாகனங்களில் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதேபோன்று பாதுகாப்பின்றி, கவனயீனத் துடன் சாரதிகள் பய ணிப்பதும் அதிகரித் துள்ளது.

விசேடமாக ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் பாதசாரிகள் மூவர் மரணமடைந்துள்ளனர்.

வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகளையும் வாகனங்களையும் கருத்தில்கொண்டு மிக அவ தானத்துடன் பயணிக்குமாறு சகல வாகன சாரதிகளிடமும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களே அதிகளவில் விபத்துக்குள்ளாகின்றனர்.

மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களால் வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகளும் மரணமடைகின்றனர்.

அதேபோன்று விபத்துக்களை எதிர்கொள்வதால் மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களும் மரணிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனவே, வீதியில் பயணிக்கும்போது போக்குவரத்து விதிமுறைகளை மதித்து மிகவும் நிதானத்துடன் பயணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விபத்துக்கள் தொடர்பான வருடாந்த புள்ளிவிவரத் தகவலைப் பார்க்கும்போது மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவு பதிவாகியுள்ளன” - என்றார். (இ)

---

## குழுக்களுக்கிடையிலான மோதலில் ஒருவர் உயிரிழப்பு; இருவர் படுகாயம்

கொழும்பு, நவ. 02

காலி, ஊருகஸ்மங்சந்தி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவலகொட பிரதேசத்தில், இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலின்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் தாக்குதலில் ஒருவர் மரணமடைந்ததுடன் இருவர் படுகாயமடைந்த நிலையில் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மடக்கும்புர, கரன்தெனிய பிரதேசத்தை சேரந்த 51 வயது நபரே உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர், துப்பாக்கியுடன் மற்றுமொருவரை அழைத்துக் கொண்டு களுவலகொடை பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு சென்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.



இந்தச் சம்பவத்தில், குறித்த வீட்டிலிருந்த பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதையடுத்து வீட்டிலிருந்த நபர், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் மீதும் அவருடன் சென்ற நபர் மீதும் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இதன்போதே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் மரணமடைந்துள்ளார்.

தாக்குதலுடன் தொடர்புடைய நபரைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

---

## 5 வயது சிறுமி உட்பட மூவர் நீரில் மூழ்கி பரிதாப மரணம்

கொழும்பு, நவ. 02

ஐந்து வயது சிறுமி உட்பட மூவர் நீரில் மூழ்கி மரணமடைந்தனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக, மொனராகலை, தம்பகல்லை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீகஹப்பிட்டிய வாவியில் மீன்பிடிக்கச் சென்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார்.

குறித்த நபரை மீட்டு தம்பகல்லை வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் மரணமடைந்தார் என்று தம்பகல்லை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகஹப்பிட்டி, தம்பகல்லை பிரதேசத்தை சேர்ந்த 53 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

தம்பகல்லை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை இங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பான ஆற்றில் குளிப்பதற்காகச் சென்ற 68 வயது நபரும், 5 வயது சிறுமியும் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளனர்.

நீரில் மூழ்கியவர்களை உடனடியாக மீட்டு இங்கிரிய வைத் தியசாலையில் சேர்த்தபோதி லும், அவர்கள் ஏற்கனவே மரணமடைந்துவிட்டனர் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இங்கிரிய, ஊருகல பிரதேசத்தை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக இங்கிரிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (இ)

# வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் மாதம் 2,612 பேருக்கு தொற்று; 71 பேர் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 02

வடக்கு மாகாணத்தில் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 2 ஆயிரத்து 612 பேர் கொரோனா நோய்த் தொற்றுக்குள்ளாகியதுடன் 71 பேர் உயிரிழந்தனர்.

ஒக்ரோபரில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 44 பேரும், வவுனியா மாவட்டத்தில் 14 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் 74 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் மாதத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 865 பேரும், வவுனியா மாவட்டத்தில் 703 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 654 பேரும், மன்னார் மாவட்டத்தில் 273 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 117 பேரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 44 பேரும், வவுனியா மாவட்டத்தில் 14 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 9 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பேரும் என 71 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை வடக்கு மாகாணத்தில் 833 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர்.

(இ-3)

## வயிற்றினுள் மறைத்து கொக்கெய்ன் கடத்தி வந்த கென்ய பிரஜை கைது!

கொழும்பு, நவ. 02

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமான நிலைய வளாகத்திலிருந்து கொக்கெய்னுடன் வெளியேற முயன்ற கென்யாப் பிரஜை ஒருவரை சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

எமிரேட்ஸ் விமான சேவையின் ஈ.கே. 650 என்ற விமானத்தில் இலங்கை வந்த குறித்த நபரிடமிருந்து பெருந்தொகையான கொக்கெய்ன் அடங்கிய வில்லைகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று சுங்க ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை விமான நிலைய வளாகத்தில் உள்ள உடல் பரிசோதனை இயந்திரத்தின் மூலம் சோதனையிட்டபோது, அவரது வயிற்றினுள் சந்தேகத்துக்கிடமான பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் 39 வயதான கென்ய பிரஜை என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (இ)





## கிளிநொச்சி மாவட்டத்தில் வீடுகளுக்குள் வெள்ளம்!

### மக்கள் பெரிதும் பாதிப்பு

கிளிநொச்சி, நவ. 02

வடக்கில் தொடர்ச்சியான மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில், தாழ் நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பல தாழ் நிலப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள், பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இருப்பினும், வெள்ளத்தால், மக்கள் இடம்பெயர்ந்து செல்லும் நிலைமை ஏற்படவில்லை என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக, தற்காலிக வீடுகளில் வசிக்கின்ற மக்கள், பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அவர்களது வீடுகளுக்குள்ளும், மழை வெள்ளம் புகுந்துள்ளது.

கடந்த காலத்தில், நிரந்தர வீட்டுத் திட்டங்களுக்கு உள்வாங்கப்பட்டு, ஆரம்பகட்டக் கொடுப்பனவுகள் மட்டும் வழங்கப்பட்டு, மிகுதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படாது, வீட்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ள மக்கள், நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

இந்தநிலையில், மாவட்டத்திலுள்ள குளங்களின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

10 அடி 6 அங்குலத்தைக் கொண்ட கனகாம்பிகைக்குளத்தில் 10 அடி 6.5 அங்குலத்துக்கு நீர் மட்டம் அதிகரித்தமையால் தற்போது வான் பாய ஆரம்பித்துள்ளது.

அதையடுத்து வெள்ளம் அனர்த்தம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் நிலைமையைச் சீர் செய்யும் பணிகளில் இராணுவத்தினர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் ஐக்கிய மக்கள் ஆட்சியில் கண்டறியப்படுவர்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, நவ. 02

“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள், ஐக்கிய மக்கள் ஆட்சியின்கீழ் கண்டறியப்படுவார்கள். பயங்கரவாதிகளுக்கு வழங்கப்படும் உச்சபட்ச தண்டனை அவர்களுக்கு வழங்கப்படும்.”- என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார்.

வத்தளையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

”உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் நீதிக்காக காத்திருக்கும் மக்கள் கவலையில் உள்ளனர். அவர்களின் வலி எமக்கு புரிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின்கீழ், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புட்ட அனைவருக்கும் , நீதிமன்ற கட்டமைப்பின்கீழ் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும். மன்னிப்பு என்பது கிடையாது.”- என்றார் சஜித் பிரேமதாஸ.

(அ)

## பல்கலையுடன் பனை ஆராய்ச்சி நிலையம் கூட்டு ஆய்வு நடவடிக்கை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகமும், பனை அபிவிருத்தி சபையும் இணைந்து மேற்கொள்ளவுள்ள ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பிலான பூர்வாங்க சந்திப்பு நேற்று பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பனை அபிவிருத்தி சபையால் முன்மொழியப்பட்டுள்ள ஆய்வு நடவடிக்கைகளில் இரு தரப்பினரும் பங்குபற்றி நேற்றைய சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டது.



பனை அபிவிருத்தி சபையின் சார்பில் அதன் தலைவர் கிரிசாந்த பத்திராஜா, அதன் பணிப்பாளர் சபை உறுப்பினரும், பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசகரான பேராசிரியர் சு. மோகன்தாஸ், பனை அபிவிருத்தி சபையின் பிரதிப் பொது முகாமையாளரும், பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் தர நிர்ணய முகாமையாளருமான எஸ். விஜேந்திரன் ஆகியோர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். (இ - 03)



## கொரோனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 11 பேரும் அடங்குகின்றனர். இவர்களில் 11 ஆண்களும் 6 பெண்களும் உள்ளடங்குவர்.

இந்த மரணங்களின் எண்ணிக்கையுடன் நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 760 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## கோட்டாபயவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டக்காரர்கள் எழுப்பினர். போராட்டக்காரர்கள் ஹோட்டலை அணுகாதவாறு பெருமளவிலான பொலிஸார் அங்கு பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

எனினும், நேற்று காலை மாநாட்டில் பங்கேற்பதற்காக கோட்டாபய ராஜபக்ஷ ஹோட்டலை விட்டு வெளியேறியபோது அவரின் வாகனத்தை முற்றுகையிட போராட்டக்காரர்கள் முயன்றபோது அவர்களை பொலிஸார் தடுத்துநிறுத்தியிருந்தனர். கோட்டாபய ராஜபக்ஷவின் வாகனம் அதிவேகமாக அங்கிருந்து பயணித்தபோது "போர் குற்றவாளி", "இனப் படுகொலையாளி", என்று போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

எனினும், உச்சிமாநாடு நடைபெற்ற கட்டட வளாகத்துக்கு எதிரேகூடிய பலநூறு தமிழர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதே போன்று ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் முன்பாகவும் புலம்பெயர் தமிழர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். லண்டன் மற்றும் பிரிட்டனின் பல பகுதிகளிலிருந்தும் ரயில்கள், பஸ்கள் மூலம் கிளாஸ்கோ நகருக்கு வந்த புலம்பெயர் தமிழர்களே இந்தப் போராட்டங்களை நடத்தினர். ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இந்தப் போராட்டங்களில் தமிழ் மக்கள் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக ஒரு வாரத்துக்கு முன்பாகவே ஸ்கொட்லாந்தில் வலுவான பிரசாரங்களை பிரிட்டன் வாழ் தமிழர்கள் ஆரம்பித்திருந்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலராக இருந்த காலத்தில் நடைபெற்ற இறுதிப் போரில் திட்டமிட்டு நடத்தப்பட்ட போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்களான மருத்துவமனைகள் மீது குண்டுவீச்சு தாக்குதல்கள், சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டமை, சித்திரவதைகள், பரவலான பாலியல் வன்புணர்வுகள் தொடர்பில் ஊடகங்களில் விளம்பரங்கள் மற்றும் அவை தொடர்பான கட்டுரைகளும் வெளியிடப்பட்டன.

அத்துடன், கிளாஸ்கோ நகரின் முக்கிய கட்டடங்களில் லேசர் ஒளியால் கோட்டாபய ராஜபக்ஷவை இனப்படுகொலையாளி, போர் குற்றவாளி என்று கூறும் பிராசரம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன், பெரிய திரைகள் அடங்கிய வாகனம் ஒன்றும் கோட்டாபய மீதான குற்றச்சாட்டுக்கள் ஒளிபரப்பியபடி கிளாஸ்கோ நகரம் முழுவதும் ஓடியது. அதில், "தமிழ் இனப் படுகொலையை நிறுத்து, ஈழ இனப்படுக்கொலையை நிறுத்து", "சர்வதேச நீதிமன்றம் முன்பாக இனப் படுகொலைக்காக கோட்டாபயவை நிறுத்து", "146,729 தமிழர்களை படுகொலை செய்தவர்", என்று கோட்டா பயவுக்கு எதிரான பிரசாங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை, பெல்ஜியத்தில் பிரிட்டன் தூதரகம் முன்பாகவும், பிரான்ஸில் ஐரோப்பிய பாராளுமன்ற ஆலோசனை சபை முன்பாகவும் தமிழர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். (ஐ)

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜன நாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

## தொற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
3 வாரங்களில் அறிந்துகொள்ள முடியும் என்று அந்த சங்கத்தின் தலைவர் மருத்துவர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

நாட்டில் கோவிட்-19 தொற்றுநோய் ஆபத்து விலகிவிட்டதாக யாரும் கருதக் கூடாது. தொற்று நோயாளர்களைக் கண்டறியும் வகையில் நாட்டில் எழுமாற்றான பி. சி. ஆர். பிரிசோதனைகளை அதிகரிக்குமாறும் கண்காணிப்புக்களைத் தீவிரப்படுத்துமாறும் சுகாதார அதிகாரிகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

இதேவேளை, பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டுள்ள நிலையில் சிறுவர்கள் கோவிட் தொற்று நோயால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் தடுப்பூசி போடப்படும் வரை பாடசாலைகளை தொடங்குவதற்கு காத்திருப்பது தீர்வாகாது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## இந்தியத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாகாண மீனவர்களின் சார்பில் வடமாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் தலைவர் என். வி. சுப்பிரமணியம், உப தலைவர் ஜே. பிரான்சிஸ், பொருளாளர் ஏ. மரியராசா, தேசிய மீனவர் நல்லிணக்க வடக்கு கிழக்கு இணைப்பாளர் அன்ரனி யேசுதாஸன், முல்லைத்தீவு அன்னை வேளாங்கண்ணி கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவர் வி. அருள்நாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## நீதியமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேரர் நியமிக்கப்பட்டமைக்கு எதிராகவே அவர் இந்த முடிவுக்கு வந்துள் ளார் என்று தெரிய வருகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நீதியமைச்சருடன் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். அவர். அவசரப்பட்டு முடிவுகளை எடுக்க வேண்டாம் என்று நீதியமைச்சரை கேட்டுள்ளார் என்று பிரபல ஆங்கில நாளிதழின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், கிளாஸ்கோ சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதும் நீதியமைச்சர் தனது விலகல் குறித்து அறிவிப்பார் என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வியத்மக அமைப்பு மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்காக அலிசப்ரி பெரும் பிரசாரங்களை செய்திருந்தார். இவர் மிக் - 27 போர் விமானங்கள் தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுக்காக கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் வழக்குகளில் வாதாடியிருந்தார். பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினரானாவர், பின்னர் நீதி அமைச்சராக பொறுப்பேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்திய பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு



கிளாஸ்கோ,நவ.2

காலநிலை குறித்த ஐநா மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஸ்கொட்லாந்து சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசியுள்ளார்.

நட்பு ரீதியாக இந்த சந்திப்பு இடம்பெற்றதாக இந்திய பிரதமர் தனது ட்விட்டர் செய்தியில் தெரிவித்திருக்கின்றார்.

## கரன்னகொட வழக்கு விவகாரம்

# பாதிக்கப்பட்ட தாயின் தகவல் அறியும் உரிமை நிராகரிப்பு!

கொழும்பு, நவ. 02

5 மாணவர்கள் உள்ளிட்ட 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொடவுக்கு எதிரான வழக்கு கைவிடப்பட்டமை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட, தனது ஒரே மகனை இழந்துள்ள கொழும்பு - கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சரோஜா நாகநாதன் எனும் தாய் முன்வைத்த தகவல் அறியும் விண்ணப்பமே இவ்வாறு நிராகரிக்கப்படுவதாக சட்ட மா அதிபர் சார்பில் தகவல் அதிகாரியாக பிரதி சொலிசிட்டர் ஜெனரால் ரஜீவ் குணதிலகவால் கையெழுத்திட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 16 ஆம் திகதி, ஆர். ஐ./22/2021 எனும் பதிவிலக்கத்தின் கீழ் முன் வைக்கப்பட்டுள்ள குறித்த விண்ணப்பத்தை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 5 (1) (ஊ) பிரிவின் கீழான விதிவிதானங்களுக்கு அமைய நிராகரிப்பதாக சட்ட மா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறயினும், குறித்த நிராகரிப்பு தொடர்பில் அதிருப்தியடைந்தால், தகவல் அறியும் சட்டத்தின் 31 (1) ஆம் பிரிவின் கீழ், மேன்முறையீட்டுக்காக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்கவை 14 நாட்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு விவரங்களுடன் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# பிரபல கர்நாடக இசைக் கலைஞர் சிவசக்தி சிவநேசன் காலமானார்

லண்டன்,நவ.2

லண்டனில் பிரபல கர் நாடக இசைக் கலைஞராக திகழ்ந்த திருமதி சிவசக்தி சிவநேசன் நேற்றுமுன் தினம் காலமானார்.



லண்டன் பாரதிய வித்ய பவனில் மூன்று தசாப்தங் களுக்கு மேலாக வாய்ப் பாட்டு, வீணை ஆசிரியை யாக திகழ்ந்த இலங்கைய ரான சிவசக்தி, லண்டனில் ஏராளமான மாணவ மாணவிகளை வாய்ப்பாட்டிலும் வீணையிலும் அரங்கேற்றியவர். இவர்களில் சிலர் இத்துறைகளில் உன்னத ஆற்றல் பெற்றுத் திகழ்வது குறிப்பிடத்தக்கது. பாரதிய வித்ய பவனின் பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் சிவசக்தியின் பாட்டு தனியான இடத்தைப் பெற்றது.

'வாணி பைன் ஆர்ட்ஸ்' என்ற நிறுவனத்தையும் சிவ சக்தி தனது கணவர் சிவநேச னுடன் நிர்வகித்துவந்தார்.

யாழ்ப்பாணம் என். வீரமணி ஐயரின் மாணவி யான சிவசக்தி, வீரமணி ஐய ரின் ஆக்கங்கள் அனைத்தை யும் பிரசுரிப் பதில் எடுத்த முயற்சி பெரிதானது. வீரமணி ஐயரின் கீர்த்தனைகளை மேடைகளில் பிரபலடையச் செய்வதிலும் அவர் பெரும் அக்கறை கொண்டி ருந்தார். பல நற்பணிகளுக்கான நிதி யுதவியிலும் அவர் துணை புரிந்தார்.

யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியிலும் பணியாற்றிய சிவசக்திக்கு வயது 64.

## ஐ.எஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலதிக நீதிவான் சந்திம லியனகே முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரிய வந்தது.

இந்தியாவின் அரச புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்பட்ட மொஹமட் சம்சுதீன் என்ற ஐ. எஸ். அமைப்பின் உறுப்பினர் ஒருவரால் நடத்தப்பட்ட 'வட்ஸ் அப்' குழுவுடன் இந்த இலங்கையர்கள் தொடர்புபட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய குறித்த இலங்கையர்கள் 702 பேரும் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்கள் தடுப்பு காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கை அணியை வீழ்த்தி இங்கிலாந்து அரையிறுதியில்!

## ஜோஸ் பட்லர் அதிரடி சதம்





சார்ஜா, நவ. 02

ஜோஸ் பட்லரின் அதிரடி சதத்தின் உதவியுடன் இலங்கை அணியை 26 ஓட்டங்களால் போராடி வெற்றி கொண்ட இங்கிலாந்து அணி அரையிறுதியில் தனது இடத்தை உறுதிப்படுத்தியது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 12 சுற்றில் நேற்றிரவு நடந்த போட்டியில் இங்கிலாந்து - இலங்கை அணிகள் மோதின.

சார்ஜாவில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஜசன் றோய், ஜோஸ் பட்லர் என வழக்கமான இணை தொடக்கம் கொடுத்தது. றோய் 9 ஓட்டங்களுடன் வனிந்து ஹசரங்கவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் பட்லர் நிலைத்து ஆட, டேவிட் மலன் 6, பெயர்ஸ்ரோ 0 என முக்கிய வீரர்கள் ஆட்டமிழந்தனர். எனினும், அடுத்து வந்த அணித் தலைவர் இயன் மோர்கன் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவே, பட்லர் சிக்ஸர்கள், பௌண்ட்ரிகளை தெறிக்க விட்டார்.

இயன் மோர்கன் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 40 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், ஜோஸ் பட்லர் 6 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 67 பந்துகளில் 101 ஓட்டங்களைக் குவித்து இருபது - 20 போட்டியில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 3 விக்கெட்களையும், துஷ்மந்த சாமீர ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார். 164 ஓட்டங்கள் என்ற இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தொடக்க வீரர்கள் அதிர்ச்சி கொடுத்தனர். பதும் நிஷங்க ஓர் ஓட்டம். குசல் பெரேரா 7 ஓட்டங்கள் என வீழ்ந்தனர்.

எனினும் அடுத்து இணைந்த சரித் அசலங்க, அவிஸ்க பெர்னாண்டோ சற்று பொறுப்புடன் ஆடினர். அசலங்க 21 ஓட்டங்கள், அவிஸ்க 13 ஓட்டங்களுடன் வெளியேறினர்.

தொடர்ந்து வந்த, பானுக ராஜபக்ஷ, தசுன் சானக ஆகியோர் போராடினர். பானுக 2 சிக்ஸர்கள், 2 பௌண்ரிகளுடன் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அவரைத் தொடர்ந்து தசுனும் 26 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

வனிந்து ஹசரங்க இலங்கை அணிக்காக அதிரடியாக ஆடினார். ஆனால், மறுமுனையில் வேகமாக விக்கெட்கள் சாய ஆரம்பித்தன. 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் வனிந்து ஹசரங்க 21 பந்துகளில் 34 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். இதுவே இலங்கை அணியின் வீரர் ஒருவரின் அதிகபட்ச ஓட்ட மாக அமைந்தது.

இறுதியில், 19 ஓவர்களில் 137 ஓட்டங்களுக்கு இலங்கை அணி சகல விக்கெட்களையும் இழந்து 26 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இலங்கை அணி.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் மொயின் அலி, அடில் ரசீத், கிறிஸ் ஜோர்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஜோஸ் பட்லர் தெரிவானார். (ஐ)



## உலகக்கிண்ண தொடர் சகீப் அல்ஹசன் விலகல்!

டுபாய், நவ. 02

உலகக் கிண்ணத் தொடரிலிருந்து பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் சகீப் அல் ஹசன் விலகியுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணி குழு 01 இல் இடம் பெற்றுள்ளது. இதுவரை அந்த அணி விளையாடிய 3 போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது.

பங்களாதேஷ் அணி இன்று செவ்வாய்க்கிழமை தென்னாபிரிக்க அணியுடனும், நாளை மறுத்தினம் அவுஸ்திரேலிய அணியுடனும் மோதவுள்ளது.

இந்த நிலையிலேயே அந்த அணியின் சகலதுறை வீரரான சகீப் அல் ஹசன் காயம் காரணமாக தொடரிலிருந்து விலகியுள்ளார். இவர், மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியின்போது காயமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பார்சிலோனா அணிக்கு திரும்ப விரும்புகிறேன்!

### லயோனல் மெஸ்ஸி



பாரிஸ், நவ. 02

எதிர்காலத்தில் பார்சிலோனா அணியின் விளையாட்டு இயக்குநராவதற்கு விரும்புகிறேன் என்று லயோனல் மெஸ்ஸி கூறுகிறார்.

34 வயதான மெஸ்ஸி 20 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்பெய்னின் பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்தார். இந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் அவரை பாரிஸ் செய்ன். ஜெர்மைன் அணி ஒப்பந்தம் செய்தது.

தற்போது அவர் ஓய்வு குறித்து யோசிக்கவில்லை என்ற போதிலும் ஒரு கட்டத்தில் விளையாட்டு இயக்குநராக விரும்புகிறேன். ஆனால், பார்சிலோனாவுக்கு திரும்பவும் சென்று பங்களிக்க விரும்புகிறேன் என்று அவர் கூறியுள்ளார். (ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - பைரவா.எல் கே ஜீ திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்
**இரவு**
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஸ்ரீ**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு